உ

# கர்ம யோகி ஸ்ரீ. வே. சு.

ஆக்கம்:

புலவர். செல்வி. சி. விசாலாட்சி

குருகுலம்— கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ம யோகி ஸ்ரீ. வே. க.

ஆக்கம்:

புலவர். செல்வி. சி. விசாலாட்சி
குருகுலம்—கிளிநொச்சி

வெளியீடு:

கரைச்சி சைவவித்தியா விருத்திச் சங்கம்
குருகுலம்—கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ம யோகி திரு வே. க.
அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

முதற் பதிப்பு 1988 நவம்பர்

ஆசிரியர் புலவர் சி. விசாலாட்சி
குருகுலம்—கிளிநொச்சி

வெளியீடு சைவ வித்தியா விருத்திச் சங்கம்
குருகுலம்—கிளிநொச்சி

அச்சகம் சர்வசக்தி அச்சகம்
குருகுலம்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவம்

## கடவுள் வணக்கம்


அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே.

கடலூர் வள்ளலார்.

"வளரும் குருகுல நிதிக்கு
இந்நூல் சமர்ப்பணம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வே. கதிரவேலு — குருகுல நிர்வாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திரு சுத்தானந்த பாரதி அவர்கள்
குருகுலத்துக்கு வந்து பார்வையிட்டபின் பாடிய

# குருகுல கீதம்

மகாதேவ சம்போ ஜய ஜய
மகாதேவ சம்போ—என்போம் — மகா

பச்சைத் திருவளர் சோலை
பரமன் குருகுல சாலை
உச்சக் கலைதரு நிலையம்
உழைப்பால் வளம்பெற விளையும் — மகா

தாய்தரும் அமுத சுரபி
தண்ணருள் அன்பின் அருவி
வாய்மையும் தூய்மையும் வாழும்
மாசறு மாதவச் சூழல் — மகா

வாழ்வினில் உள்ளது சமயம்
மனப்பான்மை யினால் அமையும்
ஆழ்ந்த கருத்துறு காவியம்
அழகு மணக்கும் ஓவியம் —மகா

பாருல காலயந் தனிலே
பணிசெய்யும் துறவே இனிதே
ஒருலகில் ஒரு குலமாய்
ஒருமையில் வாழ்வது நலமே. — மகா

(ஒப்பம்) சுத்தானந்தபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

# நல்லையாதீனத் தம்பிரான் சுவாமிகள்

சைவ செம்மனச் செல்வர்களே!

பிரமுகர்கள் பட்டங்கள், விருதுகள், புகழாரங்கள் பெறுகின்றனர். அவையெல்லாம் உண்மை அன்புவழி அளிக்கப் பெற்றன வென்று எண்ண இடமில்லை. ஆனால் மஹான் கதிரவேலு அவர்கள்பால் அன்பு பாராட்டுப வர்கள் அப்புஜீ என்ற பெரும் பெயர் ஈய்ந்து கொண் டாடினர். முதன்முதலாக இலங்காபுரியில் 1964 ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் குருகுலம் அவர்களால் உருவாக்கப் பெற்றது' இலங்கையில் ஒரேஒரு நிறுவனமும் இதுவே. அதனால் மேன்மையுற்றது. காஷாயம் அணி யாத கலைஞானி, மெஞ்ஞானி அவர், சைவப்பழமான தோற்றம், நாலுமுழ வெள்ளை வேஷ்டி, தோளிலே ஒரு வெள்ளைத் துணி, திருநீற்றுப் பொலிவு, மென்மையான பேச்சு, நாம் அங்கு விஜயம் செய்தபோது அங்கு வதியும் பிள்ளைகள் பக்தி சிரத்தை நிறைந்த நல்லொழுக்க சீலர் களாக விருப்பதைக் கண்டு உளப் பூரிப்படைந்தோம். சைவசமய வகுப்புகள், சமஸ்கிருத வகுப்புகள், ஆதியன சிரிய முறையில் நடாத்தப் பெறுவதையும் கண்ணுற்றோம் இப்படி இப்பிள்ளைகளை யெல்லாம் வளர்த்தெடுத்த பரோப காரி அப்புஜீ அவர்கள். அனைத்துப் பிள்ளைகளுக்கும் புகலிடம் கொடுத்து ஜாதி, மத பேதம் பாராட்டாது மற்றும் பிள்ளைகளுக்கும் தொழில் துறைப் பயிற்சிகள் அளித்துப் பலரைப் பதவிகளில் கூட ஏற்றிவைத்த பெருமை குருகுலத்தையே சாரும்.

இத்துணை பாரிய பொதுநல நிறுவனம் ஒன்றினை உருவாக்க "அப்புஜீ" அவர்கள் எத்துணை கஷ்டங்கள் இடர் இன்னல்களை அனுபவித்திருப்பார். சிந்திக்கவேண்டியதொன்று. இப்பொழுது குருகுலப் பொறுப்பேற்றிருக்கும் நிர்வாகிகள் அப்புஜீ அவர்களின் அபிலாஷைகளை தளர்வுறாது நிறைவேற்றுவதே அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். அப்புஜீ அவர்களின் விளக்கற்கரிய மகத்தான சேவைகளையும், அவர் வரலாற்றையும் தொகுத்து "கர்மவீரர்" என்ற நூல் வெளிவருவதைப் பாராட்டுகிறோம். நிச்சயமாக சைவ உலகுக்கு யாத்து அளிக்க வேண்டிய நூலிது. இதன் ஆசிரியரை உளமார வாழ்த்துகிறோம்.

மேலும் குருகுல வளர்ச்சிக்கு உறுதுணை நல்கும் அன்பர்கள் அனைவருக்கும் பரம்பொருளின் பாதாரவிந்தங்களைத் தியானித்து எமது அன்புகனிந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்யஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவேலு ஆசிரியர் காட்டிய
# கர்மயோக நெறி

சமூக நலன்விரும்பிகள் அனுட்டிக்கவேண்டிய சிறந்த நெறி கர்மயோகமாகும். இந்த உயர்ந்த நெறியில் நிற்போர்க்கு உடல் வலிமையோடு உள்ளத்து வலிமையும் வேண்டப் படுவதாகும்.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்று பாடியவர் ஏழாம் நூற்றாண்டு அப்பர். ஆனால் இதே குறிக்கோளோடு இருபதாம் நூற்றாண்டில் எம் மத்தியில் வாழ்ந்து காட்டியவர் குருகுலத்து அப்பு அவர்கள். எழிமையான தோற்றம், பதமையான வார்த்தை சிந்தனைகளை வெளிப்படுத்தும் திருமுகம், உச்சிக் குடுமி ஆடம்பரமற்ற சிறிய நரைத்த தாடி, இத்தனையும் பொலிந்த ஒரு திருவுருவம். காடுகளை வெட்டிக் கழனி களாக்கிய ஒரு கர்மயோகி. கடவுள் நம்பிக்கையோடு கல்வி கற்கவேண்டுமென்ற முறையில் கோயிலமைத்துக் குருகுலத்தை நடாத்திய ஒரு பக்திமான். ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்பதைத் தனது தொண்டுகளால் மெய்ப்பித்த ஒரு திருத்தொண்டன். கால் நூற்றாண்டுக்கு மேலாக தன்னல உணர்வின்றி பிறர் நலம் பேணும் மனப்பாங்குடன் திக்கற்ற சிறார்களை வளர்த்து நற்பிரசைகளாக்கிய ஒரு புண்ணியப் பிறவி. எமது சமயம்; எமது மொழி; எமது நாடு; எமது மக்கள் என்ற உணர்வுடன் பணிபுரிந்த இப்பெரியார் இன்று எம்மத்தியிலில்லை. இவருடைய குடும்பம் ஒரே தியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம்; அந்தக் குடும்பத்தவரும் அமரத்துவம் அடைந்து விட்டனர். பொல்லாத காலம் நல்லவர்களை அழித்துவிட்டது. ஆனால் அவர்கள் காட்டிய வழி; ஏற்படுத்திய நிறுவனம் வாழத்தான்வேண்டும். அப்புவுக்கும், குடும்பத்துக்கும் அஞ்சலி செலுத்துகின்ற அனைவரும் அவர் தொடக்கி வைத்து நிர்வகித்த நிறுவனத்தை வாழவைக்க முன்வரவேண்டும். முழுநேர ஊழியம் செய்யும் பரோபகாரிகளும், தியாகிகளும், சிறந்த நிர்வாகிகளும் இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்பார்களானால் பணமும் மற்றும் வேண்டிய பொருட்களும் வந்து குவியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கண்ணியமும், நிதானமும் பொதுச்சொத்தைத் தீண்டாத வைராக்கியமும் தெய்வ நம்பிக்கையும் சொந்தச் சுகநல பந்த மற்றவர்களும் முன்வரவேண்டுமென்பதே எமது வேணவா; அப்புவின் ஆசியும் ஆண்டவனின் ஆசியும் இதற்கு வழிகாட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பு எங்குற்றூர்.

திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியில் அறுபது ஆண்டுகளுக்கு முன் ஒரு அப்பர். அவரே டாக்டர் சபாபதிப்பிள்ளை. அவரைத் தோட்ட அப்பு என்று வழங்கினர். தமது மாடி வீட்டில் ஆதரவற்ற பிள்ளைகளை வளர்த்து வந்தவர். 1928ம் ஆண்டு விஜயதசமி நாளில் திருநெல்வேலியில் இரட்டைப்பிள்ளைகள், ஒன்று சைவாசிரிய கலாசாலை மற்றது அன்புச்சோலை. இரண்டு பிள்ளையும் வளர்த்தவர் இந்து போர்ட் ராசரத்தினம், இராசரத்தினம் அப்புவாங் ஆயிரவர்களின் அன்புத்தெய்வம், ஒரு பிள்ளைக்கு உணவு இல்லை என்றால் துடியாய்த் துடித்து உடன் ஒழுங்கு செய்தவர். அன்புச்சோலையில் ஆதரவு கண்ட ஆயிரவர்களுள் கதிரவேலு என்ஞெரு விவேகி இருந்தார். இரவில் நெடுநேரம் அமைதியாய் இருந்து போத்தல் விளக்கில் படித்தவர். கெட்டிக்காரனுயிருந்து சைவாசிரிய கலாசாலையில் புகுந்து பயிற்றப்பெற்ற நல்லாசிரியனுனவர். தான் ஆதரவு பெற்ற ஆளான வகையில் தானும் ஆயிரவரை உய்தி அடையச் செய்தல் வேண்டும் என்று செயலாற்றினுர். வற்றி வரண்ட கிளிநொச்சிக் காட்டுப்பகுதியில் ஐம்பது ஏக்கர் நிலத்தை நாடாக்கினுர். நகராக்கினுர். மனித சஞ்சாரம் உண்டாக்கினுர்.

அப்புவின் குருகுலத்தை நேரிற்கண்டு சுத்தானந்த பாரதியாரும் பாடிப் பரவசமுற்றுர். குன்றக்குடிகளார், ஆசாதேவி அரியநாயகம் முதலானேரும் பாராட்டிய குருகுலம். அப்பு நல்லாசிரியர். நாடறிந்த தலைமை ஆசிரியர். காடறிந்த கமக்காரன். உலகம் அறிந்த உத்தமர். காய்கறித் தோட்டம் செய்வதும், நந்தவனம் செய்வதும் பொழுதுபோக்கு. வயற்செய்கை சிவஞேபாயம். வயிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுச்சோற்றுக்காக சொந்தச் சமயத்தை விட்டுப்பிள்ளைகள் மாறுவது ஆகாதெனக்கண்டு விடுதியிலேயே வழிபாட்டு மண்டபம், ஆராதனைக் கோயில் எல்லாம் சமைத்தார்.

அவரின் சர்வசக்தி பீடம், மேரு பீடம் ஊறவாய் சுப்பிரமணிய முனி அவர்களையும் கவர்ந்தது.

தாமும் குடும்பமுமாக ஆறுலட்சம் ரூபா பெறுமதியானவற்றை குருகுல வளர்ச்சிக்குக் கொடுத்தமை ஒரு அன்புக் கொடை, அறக்கொடை. அதனால் அவரே அப்பு. அவர் மனைவியே அம்மா. அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றாற்போல் இவர்களும் அம்மையப்பர் ஆவர்.

**க. கனகராசா ஜே. பி.**

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## May That Graceful Figure be Reborn

No one that happened to set foot in the salient featured Gurukulam at Kilinochchi is left untouched with the bewitching charm of a devoted person appearing in the traditional Tamil costume and the Saiva Emblem of three lined VIBOOTHY mark on the forehead giving lustre to the grey coloured beard below and a charming smile in the lips as if it was the reflection of both of them and the small knot of hair behind expressive of the Tamil Saiva Religiousness. Surely it was the good and happy sight for the visitors of Gurukulam till very late.

His sur name Kathiravelu was almost forgotten as he was endeared as "APPU" by all concerned at the Gurukulam circle and it was tne reflection of his loving kindness and compassion towards the inhabitance of the Gurukulam people mostly by the orphans more than two hundred in number. There were also a good number of young girls who were selected from all parts of the Eelam for Sarva Sakthi training and another good number of youngsters both male and female attending training courses meant for



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu pastors. All were getting free boarding and feeding also clothing occasionally. There were also refugees thronged in hundreds now and then. Being such the Gurukulam seemed to be many in one. It was an orphanage, a training centre, a seminary and a refugee camp at the same time.

Recently a host of refugees displaced from Matale, Anuradhapura, Medawachchi and Vavuniya rushed into the Gurukulam in many hunderds overnight. APPU has notime missed to shoulder the burden and did everything to suit the occasion with the help of a few of his followers. However, all the refugees were made to be settled within the bounds of Gurukulam. It was a very big task for Appu to cater for every need of them for more than two and a half years, though he was helped by the Government and some of the foreign charitable organisations to some extent. But it was a wonder worth seeing that Appu was more happy and more enthusiastic than ever before because of his view that he was chanced with a golden opportunity to serve as many as possible for as long as a period of more than two and a half years. Actually it was the inherent thirst of his heart that he should be ever



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

prepared to task himself for the sake of those who are suffering as the orphans and refugees and to sacrifice everything at his command to alleviate their sorrows

The noble sense of sacrifice has been dominating Appu's thought, word and deed for ever. This is to be proved by the wish of him Painted in words, in the upper plank of the door of the main entrance of the main building of Gurukulam. The painting reads "THIYAGIKAL THONRUKA" in Tamil. Being translated into English it will read 'May Those who can Sacrifice them selves for others COME Up The excessive power of the Sentiment of his sacrifice easily got his better half (AMMA) and his elder son (MURUKA) involevd in the Gurukulam activities.

He himself was the founder, propogater and the Director of Gurukulam from the very inception of it till his demise. An Institu tion known as 'Karachchi Saiva Vidya Viruthi Sangam' — The educational society of Karachchi Division — was the base of his activities. The good and noble members of the institution whole heartedly approved Appu's leading spirit and put the whole responsibility as well as their entire faith on him. In this circums



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tances he spared no time and left no stone-unturned in the pursuit of uplifting the Guru kulam to the full height of its form and merit. He has maintained close contact with the institution of his one's kind all over the world, chiefly the most eminent one known as Saiva Siddhanta Adheenam at Hawai, America, the Director of which is the world famous Swami Sivaya Snbramunia, who was given a warm reception at Kilinochchi in 1980 and taken in a grand procession to the Gurukulam where the Swami did by his hand an Abhisekam ceremony to the Guru kulam Temple Deity and greeted, congratulated and blessed this Gurukulam. This incident may remain as an indelible mark in the minds of Kilinochchi public in general and the Gurukulam devotees in special. The Gurukulam's Log-book also bear witness for its being visited by religiously eminent personages from India like Kunrakkudi Adikal and Sri Suddhananda Parathiar who composed the laudetory song of this Gurukulam in vogue.

Not only the Gurukulam but its Director our beloved Appu also was many in one. He was Gandhi Mahathma in point of his way of life. He was Rajagopalachchari in Sharpness of intelect. He was Kavi Bhara



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

thi in the feeling of nationalism. He was Janaka of the Upanishadic age in his philosophic concept. He was a saint in his Love of God. He was loveable philonthropist, a well versed pastor, an un-rivaled social worker and a painstaking farmer at the same time. He was all in all.

Appu was born of a poor parents and lost both of them in his early childhood He was brought up and educated in and by an orphanage. As a Teacher he was receiving a poor salary hardly enough for maintaining his family. There was no evidence to show that he was in an affluent circumstance. But later on he shown in a position having lack and lack that comes to and goes out of his hand in the pursuit of building and maintaining the Gurukulam. How a wonderful man is he:

The Gurukulam's full name is Adhara Kalvi Gurukulam' fashioned by Appu himself. it is interesting to note that this name is expressive of his ideal chaerished for long in his heart.

The Adhara Kalvi means Education with the prescribed three fold value that can support one as a prop in the way of leading a sensible and polite life. The said three



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

values are the religions knowledge the seeular knowledge and the vocational knowledge. The first and foremost of this three is the first one which is primarily needed for one's character formation unless otherwise the other two also are imparted in the religions back ground, they would not yield good. So, it is necessitated to hold this all three aspects simultaneously. The most fitting place for such education is the Gurukulam which alone can have the proper religious atmosphere. It is therefore that the ancient Rishees have preferred this form of education and greatmen like Mahatma Gandhi, Saint Aravindar followed it.

We need not hesitate to hold Appu to have been a disciple in the Upanishadic Risihood atleast in one of his former existence and undoubtedly it is becasue of this gift he seemed to be more and more attached to the principles of Gandhi Mahathma in this existence. So he introduced this form of education in his Gurukulam. It is to be noted that the sole purpose of this form of education is to produce men of manliness who alone can be consciously (not seemingly) good and capable of doing good to the Society. In order to extend the good of this form of education



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to village to village Appu started the training for Hindu pastors in this Gurukulam and carried it successfully for more than four years In the mean time he took every step to get it approved by the Government, but this left to be yet relaized.

None of Appu's ideals is negligible, every one is golden, every one is a panacia by itself for the social evils. In this view point they should however be maintained, and developedfor ever. In this context something prompts us from within to express the Wish. " MAYTHAT GRACEFUL FIGURE BE RE BORN".Let the divine principle conceed to it.

*—M. Kandiah*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அப்பு அமைந்த ஆச்சிரமம்

(ஆத்மஜோதி நா. முத்தையா)

அப்பு என்ற முறைப் பெயரைப் பெறுவதற்கு 50 60 வயதின் எல்லையையாவது எட்டவேண்டும். மூன்று குழந்தைகளுக்கு அப்புவாயிருந்தவர் பிற்காலத்தில் மூன்னூறு, நானூறு குழந்தைகளுக்குத் தந்தையாக விளங்கினார். வயதில் அவருக்கு அப்புவாக இருக்கக்கூடியவர்களும் அவரை அப்பு என்று அழைத்தமைதான் அதன் பெருமையாகும்.

குழந்தைப் பருவத்தில் இரத்தினம் என்று பெற்றோரால் அழைக்கப்பட்டவர். எல்லோராலும் இரத்தினம் என்று அழைக்கப்பட்டார். ஆசிரியப்பருவம் எய்தியதும் கதிரவேலு ஆசிரியர் ஆனார். இரத்தினம், கதிரவேலு, அப்பு என்ற மூன்று பெயர்களையும் தமக்கு ஆக்கிக் கொண்டவர்தான் குருகுல நிர்வாகியாக விளங்கியவர். குருகுலம் என்றதும் கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலில் அமைந்த ஸ்தாபனம் என்பதை உலகம் அறியும்.

ஒரு அப்பு மாத்திரம் எமது சமூகத்தில் தோன்றினால் போதாது. பல அபுமார்கள் தோன்ற வேண்டும். கதிரவேலு ஆசிரியர் கண்ட கனவு குருகுலமாக நிலைபெற்றது. உலகில் கண்டுபிடிக்கப்பட்டவை எல்லாம் கனவாகவும் கற்பனையாகவும், இருந்தவையே உண்மை நிலைக்கு உயர்ந்தவையாகும். அவருடைய கனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நனவாகிக் கொண்டிருக்கும் போது அவரது வாழ்க்கை எமக்கெல்லாம் கனவாக மாறியமைதான் அவரது வாழ்க்கையின் புதிராகும். அது எமக்கும் புதிராக அமைந்துவிட்டது.

தொண்டர் மறைந்துவிட்டார். ஆனால் அவரது தொண்டு மறையவில்லை: அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு அவரது தொண்டினைத் தொடருவதே. அப்புவின் பெயரால் தொண்டர் சபை ஒன்று அமையவேண்டும். அது அப்புகண்ட கனவுகளை நனவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் மு. கந்தையா (B.A) அவர்கள் வழங்கிய

## மதிப்புரை

"தியாகம்" அப்புஜீயின் ஜன்மப் பிரதிக்ஞை பிறந்து சில நாளில் பெற்றார். தொடர்பையே தியாகஞ் செய்ய நேர்ந்தது இதற்கு நிதர்சனமாம்.

இருந்தும் ஒருவகையில் சம்சாரபந்தம் பூண்டு கொண்டது. தன் இலக்குக்கு எதிரிடையாய்வருஞ் சூழ் நிலைகளையுந் தனக்குச் சாதகமாக்கிக் கொள்பவனே நற்சாட்சியாளன். An Plimistic is he who makes opportunities of his difficulties — இதற்கேற்ப அப்புஜீ தக்க தருணங் கண்டு ஒரு சத்தியவாக்கு (ஆணை) பெறுதல் மூலம் வந்த சம்சாரத்தையும் தன் தியாக புத்திக்கு உள்வீழுத்தி உடன்படுத்திக் கொண்டார் அதன் விளைவு இன்றைய கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுலம்.

குருகுலத்துக்கு அவர் நிறுவிய பெருங் கட்டிட மாகிய முதற் கட்டிடத்தின் பிரதான வாயிலின் மேல் வாசற்படியில் அவர் பொறித்திருக்கும் வாசகம் "தியாகிகள் தோன்றுக" அதைப் பொன்னெழுத்திற் பொலிவித்தல் தகும்.

குருகுலத்தில் அநாதைகளைப் பராமரிப்பது அவர் திட்டத்தில் ஒரு சிறியபகுதியாகும். மற்றப் பெரும்பகுதி தியாகிகளை உருவாக்குதல். கடந்த 24 வருட காலக் குருகுல நடைமுறைகளை அவதானிப்பவர் இலகுவில் இதனைத் தெளிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்? அவர்க்கு நேர்ந்த திடீர் முடிவின் சார்பி லும் கூட இனங்காணமுடியாத ஒருவகைத் தியாகத் தன்மை இடம் பெற்றே உள்ளது.

தியாகிகளைத் தேடுதல் அப்புவின் நிரந்தரப் பராக்கு அதற்கேற்றாற்போல் அப்புவை அணுகிய தியாக சிலர் சிலரில் முதன்மையாக வைத்தெண்ணப்படக் கூடியவர் புலவர். செல்வி. சி. விசாலாட்சி அம்மையார்.

மிகக் குறைந்த பட்ச வசதிகளோடு தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டு தூய பிரமச்சாரிணி வாழ்வில் முற்றிலும் பிறர் நலத் தொண்டு புரிந்துவரும் அம்மை யார் இவர்கள்.

பல வருடங்களாகக் குருகுல அகப்பணிகளில் முன்னின் றுழைக்கும் பாக்கியத்தைத் தமக்கு வாய்த்த அரும்பெரும் பேறாகக் கொண்டு நயிப்பவர்கள். அதனால் குருகுல அகம்படித் தொண்டர் என்ற பெருமைக்குரி யவர்கள். சாந்தமும், அமைதியுமான இவர்களின் தண்ணிய ஒழுக்கம் குருகுலச் சோலையில் முக்கிய இடம் வகித்தல் திருஷ்டி பூர்வமான காட்சியாகும்.

அப்புஜீயின் அந்தரங்க ஆலோசகர், அத்தியந்த அபிமானி இவர்கள். அவர் தம் வாழ்க்கை வரலாறுகள் சேவை வரலாறுகள் அனைத்தும் முற்ற அறிந்தவர்கள்.

அப்புஜீயின் வரலாறு ஒரு பெரிய சமூக சீர் இருத்த வரலாறு. தளர்ந்த சமுகத்துக்குத் தெம்பூட்டும் வரலாறு. அப்புஜீ இல்லாமல் கிளிநொச்சி இல்லை என்றால் ஆரும் ஆட்சேபிக்க முடியாத அளவுக்கு அந்தரங்கமான வரலாறு. முழுவிரிவில் இது ஒரு பெரிய நூலாய் வெளிவர வேண்டிய அவசியமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அதனை எழுதுவதற்குச் சகலவித தகுதிப்பாடும் உள்ளவராகிய விசாலாட்சி அம்மையார் எழுதிய இவ்வரலாற்று நூல் பெரிதும் வரவேற்கப்படும்

அப்புஜீயின் குருகுல அமைப்புக்கு முன்மாதிரியாயிருந்த இந்திய தர்மஸ்தாபனங்கள் பற்றி அம்மையார் தமது நேர்முகக் கண்கொண்டு காட்டும் விபரங்கள் சுவாரஸ்யமானவை. இக்குருகுல அமைப்பின் பின்னணியை ஆராய முயல்வார்க்கு இது முக்கியமான ஒரு தரவாக அமையும்.

அப்புஜீயுடன் உடனிருந்து பலகாலம் அளவளாவிய வகையில் அம்மையார் தாம்பெற்ற மகிழ்ச்சிப் பரிமளிப்பும், அனுபவச் சுவையும் புலப்படத்தக்க வகையில் இடம்பெறும் இந்நூற்கருத் தம்சங்களும், அவற்றுக்குப் பொருத்தமாய் அமைந்த அம்மையார் தமிழ் நடைபாணியும் நூலுக்குச் சோபை யளிக்கின்றன. குருகுல மேல் விருத்திக்கு இந்நூல் பெருமளவில் உதவும்.

வாழ்க அம்மையார் பணி

மு. கந்தையா

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஒருசில வார்த்தைகள்

உற்றவர் நாட்டவர் ஊரார்—இவர்க்
குண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்—இதில்
நல்ல பெருந்தவம் இல்லை

பக்கத் திருப்பவர் துன்பம்—தன்னைப்
பார்க்கப் பொறுதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருத்தி உலகோர்—நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி

ஊருக் குழைத்திடல் யோகம்—நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்—உளம்
பொங்கல் இல்லாத அமைதி மெஞ்ஞானம்

இத்தகைய இலக்கணம் யாவும் செயலிற் காட்டிய வீரர்களில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரர் யோகி அப்புஜீ அவர்களென்றால் மிகையில்லை.

கடலின் ஆழத்தை நரி தன் வாலினால் ஆழங் காண முயன்ற கதைபோலவே அடியேனும் அப்புஜீ அவர்களின் வரலாறு பற்றிய கதை எழுத முயன்ற தன்மையாகும். அப்புஜீ அவர்களின் வாழ்க்கைமுறை சிந்தனைகள், செயற்பாடுகள் யாவும் அளப்பரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ அப்புஜீ பற்றி எழுத வேண்டுமென்ற பேராவசையால் இச்சிறு நூல் "கர்மயோகி" என்ற தலைப்பில் வெளியீடு செய்கிறோம்.

இதில் வருகிற செய்திகள் யாவும் அடிக்கடி அப்புஜீ அவர்கள் கருத்தரங்கில் அதாவது குருகுல நீதிவிசாரக் கருத்தரங்கிலும் கலந்துரையாடலிலும் கூறியவை யாகும்.

செயற்கரிய செயல்களைச் சாதனையிற் கொண்டு வந்த அன்னார் பற்றிக் குருகுல அனுதாபிகள் மட்டுமல்ல அகில உலகமும் அறியவேண்டுமாயின் இந்நூலை விரிவாக எழுதவேண்டும். இன்றைய நிலையில் கடதாசி விலை அச்சுப்பதிவு விலை அச்சத்தை அளிப்பதால் இக்கட்டுரையைச் சுருக்கிக் கொண்டோம்.

இக் கட்டுரையை யாத்து, இதனைத் திருந்திய முறையில் நூல்வடிவாக்க எழாலை வித்துவான் திருமுருகையா (B.A) அவர்களை நாடினோம். அவர்கள் முழுமனத்தோடு பிரதியைத் திருத்தி ஆங்கிலத்திலும் தமிழிலும் மதிப்புரை வழங்கியதோடு நூல் வெளியீட்டிற்கான புத்திமதிகளையும் கூறி எம்மை ஆற்றுப்படுத்தினார்கள். அவருக்கு என்றும் நன்றியுடையோம்.

உலகப் பிரசித்தி பெற்றவரும், பெண்ணுலகின் தெய்வத்தாயாக விளங்குகின்ற துர்க்கா துரந்தரி, சித்தாந்தச் செம்மல், சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்காபுர மகளிர் இல்லத் தலைவி, துர்க்கை அம்பாள் ஆதீன கர்த்தா J.P. அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களை மிகுந்த பய பக்தியுடன் அணுகி இக்கட்டுரைக்கு அணியுரை கேட்டோம். எவ்வித மறுப்பும் கூறாது அணியுரை வழங்கியதுடன் அடியேனின் பணப் பழுவைக் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கவும், இன்நூலிற்கு ஆசியாகவும் பண உதவி செய்த நிகழ்ச்சி என்றும் மறக்கமுடியாத சம்பவம். இதனைத் துர்க்கா அம்பாளின் அருளாகவே போற்றி அவர்கட்கும் எனது மனம், வாக்குக், காயம் ஒருமித்த நன்றி அறிதலைக் கூறக் கடமைப்பட்டவள்.

மில்க்வைற் தொழில் அதிபர் சிவதர்ம வள்ளல் திரு கனகராசா அவர்களும், ஆத்மீக வள்ளல் ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா சுவாமிகளும், நல்லை ஆதீனச் சுவாமிகள் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் அவர்களும், ஆசியுரை, வாழ்த்துரை, வழங்கி இந் நூலைச் சிறப்பித்தார்கள். அவர்களின் இப்பணிக்கு அடியேன் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

இந்நூலை மிகவும் குறுகிய காலத்தில் மூவர்ண அட்டையுடன் அழகாக வெளிவர முயற்சித்த குருகுல கௌரவ நிர்வாகி ஸ்ரீ கணேசபிள்ளை(சுவாமி) அவர்கட்கும் அச்சுப்பதிவு வேலைகளை மிகவும் விரைவாகவும், அதிக விருப்பத்தோடும் செயலாற்றிய குருகுல சர்வசக்தி அச்சகத்தாருக்கும், அப்பிரதிகளின் பிழைகளைச் சரி செய்த இந்துபோதகர் மாணவன் கருணானந்தன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

இவ்வண்ணம்
**சி. விசாலாட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய

**சிந்தனைச் சிற்பி! கர்ம யோகி!!**

**தியாகச் சுடர்!!!**

# ஸ்ரீ வே. கதிரவேல் சுவாமிகள்

" அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே "

(தாயுமான சுவாமிகள்)

" புவனியிற் போய்ப்பிற வாமையி னாளும்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய் திருமாலா
மவன் விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே "

( திருவாசகம் )

ஒப்பற்ற சிவானந்தப் பெருவாழ்வைத்தருவது இப் பூவுலகமாகும். அதனாலேதான் தேவர்களும் மண்ணுலகில்வந்து பிறக்க விரும்புகின்றனர் என மணிவாசகப் பெருமான் தேனூறும் திருவாசகத்தில் இவ்வாறு திருவாய் மலர்ந்துள்ளார்.

இத்தகைய ஒப்பற்ற பூவுலகைப் பூமிசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் ஆசியாக்கண்டம், அமெரிக்காக் கண்டம், ஐரோப்பாக் கண்டம், ஆபிரிக்காக் கண்டம், அவுஸ்திரேலியாக் கண்டம் என ஐந்து பெரும்பிரிவுகளாக வகுத்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கண ஆராச்சியாளர்கள் மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என ஐந்துபெரும் திணைநிலமாக வகுத்து இந்திரன், முருகன், திருமால், வருணன், கொற்றவையென அந்நிலங்களின் வழிபடு தெய்வங்களையும் வகுத்துள்ளனர்.

ஐந்து கண்டங்களிலும் மிகவும் பெரிய கண்டம் ஆசியாக்கண்டமாகும். பாரததேசமென்று பலராலும் போற்றிப்புகழும் இந்தியா இருக்கின்றது. இந்தியா ஓர் புண்ணிய பூமி. ஞானமும், வேதமும், யோகமும், போகமும் நிறைந்தநாடு. இத்தகைய நாட்டின் பெருமை இந்தியாவின் வடக்கே காணப்படும் இமயமலைச்சாரலிலிருந்து தெற்கே கன்னியா குமரிமுனையுடன் ஈழத்தீவின் வடகீழ்ப்பகுதிவரை பரந்து காணப்படுகின்றது.

சுருங்கக்கூறினால், ஆதி முதல்வனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலாசமலை என்று அழைக்கப்படும் இமயமலையிற்தோன்றிய ஞானகுருபரம்பரை ஈழம்வரை பரந்திருக்கின்றது. புண்ணிய தீர்த்தங்கள். இருஷிகள், தபசிகள், அருளாளர்கள், விஞ்ஞானிகள் முதலானோர் இந்தியாவின் இமயமலை தொடக்கம் ஈழம் வரை காணப்படுகின்றார்கள்.

ஆதிகாலத்தில் ஈழம் இந்தியாவுடன் இணைந்து இருந்தது. ஆதிகாலமக்கள் இந்தியாவில் இருந்து கால்நடையாக ஈழம்வந்ததாகப் பழந்தமிழர் வரலாறு கூறுகின்றது. இடைக்காலத்திற் தோன்றிய கடல்கோள் ஈழத்தைத் தனியொரு பிரதேசமாக்கிவிட்டது,

இதனாலேதான் இந்தியா தாய்நாடென்றும் ஈழம் சேய்நாடென்றும் அழைக்கப்படுகின்றது. இந்தியா-இலங்கைத் தொடர்புகள் பலதுறைகளிலும் எல்லாக்காலமும் ஈடிணையின்றி அன்று தொடக்கம் இன்றுவரை இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதை நாம் பல சான்றுகள், வரலாறுகள் கொண்டு அடயக்கூடியதாக இருக்கின்றது.

'ஈழத்தமிழ்மொழி கேட்டால்—நித்தம்
இன்பம் பொங்கும் நெஞ்சினிலே
யாழ்நகர் என்றால் தமிழர்—பேச்சில்
யௌவனம் விளையாடும் அம்மா"

இத்தகைய ஈழத்திற்குப் பெருமை தேடித்தருவது யாழ்ப்பாணம் என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்தமைக்கு ஆதிச்சோழ வம்சத்தவரே முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்கமுடியாத ஓர் வரலாற்றுச் சம்பவம் ஒன்றுண்டு.

சோழநாட்டில் யாழ் வாசிப்பதில் திறமைகொண்ட அந்தகக்கவிராயர் வறுமையால் வாடிவதங்கினார். இவருடைய மனைவி வறுமையின் காரணத்தால் யாழ்பாடியை அவமதித்து ஏசுவது வழக்கமாகிவிடவே யாழ்பாடி ஈழத்திற்குவந்தார். தனது இசையின் இனிமையான விந்தைகளை யாழ்மூலம் அரசனுக்குப் புலப்படுத்தினார். இசை வெள்ளத்தில் மூழ்கிய அரசன் இலங்கையின் வடபகுதியில் உள்ள மணற்றிடர்ப் பூமியை யாழ்பாடிக்குப் பரிசாக அளித்தான்.

அந்த மணற்றிடருக்கு யாழ்பாடி; யாழ்ப்பாணம் என்ற நாமத்தைச் சூட்டினார். சோழநாட்டிலிருந்து சோழக்குடி மக்களை வரவழைத்து யாழ்ப்பாணம் என்னும் மணற்றிடரிற் குடியேற்றினார். "திரைகடல் ஓடியும் திரவியம்தேடும்" வல்லமைகொண்ட தமிழர் வழிவந்த சோழக்குடி மக்களின் இடையறு முயற்சியால் யாழ்ப்பாணம் சிறிது காலத்திற்குள் நீர்வளம், நிலவளம் மிக்க நாடாகி விட்டது. அகிலஉலகும் போற்றக்கூடிய முறையில் யாழ்ப்பாணத் தமிழர் சகல துறைகளிலும் மேன்மையுடன் விளங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நாட்டில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி யாழ்வாழ் மக்கள் ஆத்மீக ஞானத்தேன் மழையில் நனைகிறார்கள். அருள் ஞானத்தேன் வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் எங்கும் பெருகுமளவுக்குச் சைவ ஆலயங்கள் பரந்து காணப்படுகின்றன. சாதி, மத, இன வேறுபாடின்றி நான்கு சமய மக்களும் ஒன்று கூடி வாழும் அளவிற்கு யாழ்நகர் மணிமுடி அணிந்து கொண்டது.

ஈழ மாதாவைச் சூழக் காணப்படும் இந்துசமுத்திரம் ஈழத்தின் தனிச்சிறப்பைக் கட்டியம் கூறுகின்றது. இதனால் யாழ் குடாவைச்சூழப் பல துறைமுகங்கள் காணப்படுகின்றன. இதனூற் கடற்பிராயண வசதிகளும் இந்தியாவிற்கும், ஈழத்திற்கும், பிறநாடுகட்கும் தொடர்பாக இருந்து வருவதை நாம் ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தின் புனிதநகராக நல்லூர் காணப்படுகின்றது. நல்லூர் தமிழரின் இராசதானியாக ஒரு காலத்தில் இருந்தது. இங்கு காணப்படும் முருகன் ஆலயம் மிகப் பழமைவாய்ந்தது. இவ்வாலயத்தைச் சிறப்பித்த பெருமை தமிழரசர்க்கு மட்டுமல்ல ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணச் சித்தர் வரிசையில் உள்ள சிவயோக சுவாமி முதலியோர்க்குமுண்டு.

இவ்வாலயத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பித்துவிட்டால் யாழ்க்குடா முழுதும் விழாக்கோலம் பூண்டுவிடும். பலதிசைகளில் இருந்தும் பக்தகோடி மக்கள் பாதயாத்திரையாகப் பஜனையுடன் வருவார்கள். அதுபோல யாழ்நகரைச் சூழவுள்ள சப்த தீவுகளும் தேரிலன்று பஜனையுடன் பாதயாத்திரையாக வருவார்கள்.

சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது நெடுந்தீவு. இது யாழ்நகருக்கு மிக மிகச்சேய்மையில், மிக நீண்ட தீவாய் இருந்தமையால் நெடுந்தீவு என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு நீர்வளம் நிலவளம் மிக்க பிரதேசம். இது இந்தியாவுடன் தொடர்புள்ளது, இந்தியாவில் இருந்து அற்புதமான பொருட்கள் நெடுந்தீவில் இறக்குமதி செய்யப்பட்டுவந்தது. நெடுந்தீவில் ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பித்துவிட்டால் போதும், இந்தியாவில் இருந்து ஆலயத்துக்கு இன்றியமையாத பொருட்களும் மலர்வகைகளும் வள்ளங்களில் வருவதுண்டு. நெடுந்தீவில் இருந்து பால், தயிர், நெல், அரிசி இன்னும் சில இன்றியமையாத பொருட்கள் வள்ளங்களில் இந்தியா கொண்டு செல்வார்கள். இவ்வாறுன கொள்வனவும், கொடுப்பனவும். பண்டமாற்றும் அன்றுதொடக்கம் இன்றுவரையும் இருந்து வருகின்றது.

நெடுந்தீவில் கற்பகதருக்கள் (பனைகள்) பெருந்தொகையாகக் காணப்படுகின்றன. இதனுல் பனையோலைக் குடிசைக் கைத்தொழில் அங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. நெடுந்தீவில் உள்ள வேலிகள் அதிகமாகக் கற்களால் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. பசும்பாலும், பனம் பாலும் அதிகமான இடங்களில் மயங்கி ஓடுவதை இன்றும் அவதானிக்கலாம். நால்வகை நிலங்ளும் இங்கு காணப்படுவதால் நாட்டு வைத்தியத்திற்குத் தேவையான எங்கும் கிடைக்கமுடியாத மூலிகைகள் இங்கு கிடைப்பதால் மூலிகைத் தீவென்றும் நெடுந்தீவை அழைப்பார்கள். இங்கு பல இனக்குதிரைகளும் காணப்படுவதால் குதிரைத் தீவென்றும் இதனை அழைப்பார்கள்.

இங்கு ஆரம்பப் பாடசாலை முதல் மகாவித்தியாலயம், வைத்தியசாலை, கிறீஸ்தவ ஆலயங்கள், சைவ ஆலயங்கள் இருப்பதைக்காணலாம். போக்கு வரத்துவசதிகளும் உண்டு. நெடுந்தீவு மக்கள் கலை, கலாச்சாரம் முதலிய பண்பாடு மிக்கவர்கள். விருந்தோம்பும் சிறப்பு தனிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

„வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

(திருக்குறள்)

இத்தகைய பெருமை பொருந்திய நெடுநீவின் கண்ணே மகாத்மாகாந்திஜீ, வடலூர் வள்ளலார், ஆச்சாரிய விநோபாவே, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தவத்திரு சிவயோகசுவாமிகள் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா, போன்ற பெரியவர்களின் அடியை யொற்றி „வாழையடி வாழையாக" இக்கட்டுரைக் கதாநாயகன் சிந்தனைச்சிற்பி ! கர்மயோகி !! தியாகச்சுடர்!!! சீவன்முக்தர், கரைச்சி சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஓர் அங்கமாகிய கிளிநொச்சி ஆதாரக்கல்விக் குருகுல ஸ்தாபகர் அதன் கௌரவ நிர்வாகி திரு. வேலுப்பிள்ளை கதிரவேல் அப்புஜீ அகவகள் மலர்ந்தார்கள்.

தனக்கென வாழாது பிறர் வாழ்விற்காகவும், தன் தாய்நாட்டிற்காகவும், வாழ்ந்து கத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சைச் சத்தியப்போர் செய்து, வெள்ளையரைப் பாரத நாட்டிலிருந்து வெளியேற்றினார் மகாத்மா காந்திஜீ, குடியிருக்கும் குடில்கட்ட நிலமின்றி, உண்ண உடுக்க வசதியின்றி, வறுமைப் பிணியால் வருந்திய இந்திய நாட்டுப் பலதரப்பட்ட மக்களுக்கு, நல்வாழ்வைத் தேடிக்கொடுக்க விரும்பிய ஆச்சாரிய விநோபாவே அடிகளார் அவர்கள், தமது பட்டம், பதவிக்குரிய பத்திரங்களை அக்கினிதேவனுக்கு அர்ப்பணம் செய்தார். தனது இளமைக் காலந்தொட்டுத் தள்ளாத வயதுவரை கால்கள் தேய காடுகள், மலைகள், ஆறுகள்—முதலியன வெல்லாம் பாதயாத்திரை செய்தார். பூமியாசித்தார் அவ்வேழை மக்கட்குப் பூதானம் செய்துவந்தார் ஆச்சாரிய விநோபாவே அடிகளார். இம்மேதைகளின் வாழ்க்கை போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புஜீ என்று எல்லோராலும் அன்பாகவும், செல்லமாகவும் அழைக்கப்படும் குருகுலக் கௌரவ நிர்வாகி திரு. வே. கதிரவேல் அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது.

அப்புஜீயும் அவர்களின் துணைவியாரும் ஒன்றிணைந்து செயற்கரிய அறப்பணிகளைக் குருகுலத்துக்குச் செய்தார்கள். தங்களை முழுமையாகவே அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணித்துப் பஸ்பமானார்கள். அவர்களின் வாழ்க்கை வரலாறும், அவர்கள் கடந்த இருபத்து மூன்று வருடங்களில் குருகுலத்திற்காக ஆற்றிய அறப்பணிகளும் எழுத்திலோ அல்லது மேடைப்பேச்சிலோ அடங்காதவையாகும். அன்னார் எழுபது ஆண்டுகள் மட்டும் வாழ்ந்தார்கள். அவர்கள் ஆற்றிய சிறிய அருள் அறப்பணிகள் உலக முள்ளளவும் சிந்திக்க வைப்பவை யென்றால் மிகையில்லை.

"எவன் எவ்வுயிரிடத்தும் பகைமை இல்லாதவனாய் நட்புப் பூண்டவனாய், கருணையுடையவனாய், என்னுடையது என்ற எண்ணம் இல்லாதவனாய், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாய்க் கருதுபவனாய்ப், பொறுமையுடையவனாய், அடங்கிய மனத்தினனாய்த், திடமான சித்தம் உடையவனாய், மனதையும் புத்தியையும் என்னிடம் அர்ப்பணம் செய்தவனாய், உள்ள அவனே எனது பக்தன். எவனிடம் இருந்து உலகம் துன்பப் படுவதில்லையோ, எவன் மகிழ்ச்சி, சினம், அச்சம் மனக் கிளர்ச்சி இவற்றினின்று விடுபட்டவனோ அவன் எனக்குப் பிரியமானவன்" என்றும்

"எவன் எதையும் விரும்பாதவனாய், தூயவனாய் சுறுசுறுப்பு உடையவனாய், ஒருபொழுதும் துயரப்படாதவனாய், தனது நலனைப் பெருக்குவதற்கான முயற்சியை விட்டவனாய். இகழ்ச்சியும், புகழ்ச்சியும் சமமாகக் கொள்பவனாய், மௌனியாயும் ஆழ்ந்த சிந்தனையுடையவனாயும் இருப்பவனாய்க் கிடைத்ததைக்கொண்டு திருப்தியுற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்புடன் இருப்பவனாய், உலகமே தன் வீடு என்று நினைப்பவனாய்த் தன் கொள்கையில் திடசித்தம் உடைய வனாய் இருக்கின்றானோ அவனே எனக்குப் பிரியமான வன் என்று முழங்கும் கீதா உபதேசத்தைத் தன் கடைசிக்கால மூச்சுவரை தன் இலட்சியமாகக் கடைப் பிடித்து வாழ்ந்த அப்புஜீ அவர்களின் வரலாற்றுக்கதை அதி அற்புதமான கதையாகும்.

அரிச்சந்திரனும், இராமரும், தருமரும் தமக்குப் பற்பல இடுக்கண் அடுக்கடுக்காய் விளைந்தபோதும் தமது குறிக்கோளிற்குப் பங்கம் அணுவளவும் நேராது பாது காத்து வந்ததுபோல அப்புஜீயும் துணைவியாரும் தவிர்க்க முடியாத பாடுகள் ஊடேயும் தளராது குருகுலச் சாலையை கண்ணை இமை காப்பதுபோலப் பேணி வளர்த்தார்கள்.

கற்பூரம் கரைந்து, கரைந்து ஒளியைத் தருகின் றது. சாம்பிராணி எரிந்து, எரிந்து நறுமணம் அளிக்கின் றது. சந்தனம் தேய்ந்து, தேய்ந்து அழகும் குளிர்ச்சி யும் கொடுக்கின்றது. அதுபோல அப்புஜீயின் குடும்பத் தியாகம் குருகுல தாபனத்தின் ஒளியாயும், நறுமணமா யும், அழகாயும் அமைந்த தன்மையை எண்ணியெண்ணி ஆராமையுறுகின்றோம்.

அப்புஜீயின் பிள்ளைத் திருநாமம் இரத்தினம் என் பதாகும். இவர் 1917-ம் ஆண்டு, வைகாசி மாதம் ஆயி லிய நட்சத்திரத்தன்று, ஆதிக்குடித் தனித்தமிழர் மர பில் நெடுந்தீவில் திரு. வேலுப்பிள்ளைக்கும் அவர்தம் துணைவியாருக்கும் ஏக புத்திரனாக மலர்ந்தார்.

இரத்தினம் பிறந்து சிறிது காலத்திலேயே பெற் றோர்கள் ஒருவர்பின் ஒருவராக மண்ணுலக வாழ்வை நீக்கி விண்ணுலகை அடைந்தனர். பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனுக்குப் பெற்றோரின் பிரிவின் ஆற்றாமை அரும்பாது இருப்பதற்காக, இரத்தினத்தின் சிறிய தாயார், சிறிய தகப்பனார், பேரனார் முதலியோர் இரத் தினத்தை அருமை பெருமையாக வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைபோல வளர்ந்துவந்தான். அயலில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்ருன் அந்தச் சின்னம் சிறுவயதிலேயே வாக்கு வசீகரம் இருந்தமையால், சிறுவனின் வாக்கு வல்லமையால் பெரும் குடும்பப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. வீட்டில் ஏற்படும் சிறிய பிரச்சனை தொடக்கம் பாரிய பிணக்குகள், சண்டைகள்வரை தீர்த்துவைக்கப் பேரஞர் இரத்தினத்தின் வரவை எதிர்பார்க்குமளவு இரத்தினத்தின் சாதுரியமும், விவேகமும் காணப்பட்டன.

வியாபார நோக்கத்தில்வந்த போர்த்துக்கீசர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோர் நாளடைவில் மக்களிடம் தமது மதத்தைத் திணித்தனர். இதனுல் இலங்கையின் பல பாகங்களிலும் கிறீஸ்தவ தேவாலயங்களைத் தாபித்தனர். நெடுந்தீவிலும் பல கிறீஸ்தவ தேவாலயங்களைத் தாபித்தனர். "மழைவிட்டும் தூவானம் விடாதது" போல அன்னியரின் ஆதிக்கம் குறைந்தாலும் மக்களை மதமாற்றம் செய்வதில் கிறீஸ்தவ குருமார் வேக வேகமாகச் செயற்பட்டார்கள்.

இரத்தினம் சிறுவஞக இருந்த காலத்தில் கிறீஸ்தவமதம் காட்டுத் தீபோலப் பரவிக்கொண்டே இருந்தது. பட்டம் பதவிகளையும் வேலைவாய்ப்புக்களையும் விரும்பிய மக்கள் வலிந்து கிறீஸ்தவ மதத்தைத் தழுவி அனுட்டித்தனர். கிறீஸ்தவமதச் சூழலில் இரத்தினத்தின் குடும்பம் இடம் பெற்றமையால் கிறீஸ்தவ மதத்தை இரத்தினமும் முகரவேண்டி இருந்தது.

இக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தின் வேகத்தைத் தடுத்துச் சைவசமயமே மெய்ச்சமயம் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வைக்க எண்ணிய சைவப் பெரியார்களில் ஒருவராகிய திரு. இராசரத்தினம் என்பவர், வட இலங்கைச் சைவ அபிவிருத்திச் சங்கத்தை நிறுவினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்க முகாமையாளராகிய சைவப்பெரியார் திரு. இராசரத்தினம் அவர்கள் இலங்கையின் பலபாகங்களிலும் சைவசமயப்பண்பாடு, கலாச்சாரம் முதலியன பெருகவும் பல சைவவித்தியாசாலைகள், கல்லூரிகள் திறுவினர்.

சைவ அனாதைப் பிள்ளைகள் கல்விபயில முத்துத்தம்பி வித்தியாசாலையும், அவர்களைப் பாதுகாக்க முத்துத்தம்பி சைவ அனாதைகள் விடுதியும் அமைத்தார். இங்கு வந்துசேரும் பெற்றோர்அற்ற குழந்தைகட்கு இலவச உணவு, உடை, உறையுள், கல்வி கற்பதற்குரிய உபகரணங்கள் அனைத்தும் அளித்தார். அப்பிள்ளைகளின் குறைபாடுகளை நீக்கத் தந்தையாய், தாயாய், நல்லதோர் குருவாய் விளங்கிய திரு. இராசரத்தினம் அவர்கள் சைவசமயப் பயிரைப் பிறமதக் கொடிய மிருகங்கள் மேயாது பாதுகாக்கும் மதில்போலக் காணப்பட்டார்.

பெற்றோர் இல்லாத காரணத்தால் இரத்தினம் திருநெல்வேலி முத்துத்தம்பி அனாதைகள் விடுதியில் இருந்து மேற்கொண்டு கல்வி பயில்வதற்காகச் சேர்க்கப்பட்டான்.

மழைநீர் இயல்பிலே சுத்தமான நீராகும். ஆனால் அதுவிழுகின்ற இடத்தைப்பொறுத்து அதன் நிறம், குணம் இயல்புகள் மாறுவதை நாம் எமது அன்றாட வாழ்க்கை அனுபவத்திற் காண்கிறோம் அல்லவா? இரத்தினத்தின் முன்னோர் கிறீஸ்தவத் திணிப்பின் மத்தியில் வாழ்ந்தமையால் கிறீஸ்தவ மதத்தைத் தழுவிய இரத்தினம் இப்போது திருநெல்வேலி மாதவச் சைவ அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டமையால் சைவசமய அனுட்டானங்களை அனுசரித்து வளர்ந்து வந்தான்.

இரத்தினம் சைவச்சிறுவர் விடுதியில் வாழ்ந்து சைவவித்தியாசாலையிற் கல்விகற்றான். இதனால் கல்வி கேள்வி ஞானத்திலும், பண்பாட்டுப் பழக்கவழக்கங்களிலும், சமய அனுட்டானம், ஆசாரம், ஒழுக்கம் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றிலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றிக் காணப்பட்டான் என்பதைப் பிற்காலவாழ்க்கை எடுத்துக்காட்டாகவுள்ளது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னும் நட்பு"

என்ற திருக்குறள் வாய்மையை நன்கு கற்றுத் தேர்ந்த இரத்தினத்தின் நட்பு மிகமிக உச்சக்கட்டமானது. தனது வகுப்பு நண்பர்களின் நலன்களிலும், அவர்களுடைய கல்வியிலும் மிகுந்தகவனம் இரத்தினம் கொண்டிருந்தான். ஒருநாள் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையின் பெறுபேறுகளைத் தனது வகுப்பாசிரியர் வாசித்ததும் இரத்தினம் வெதும்பி, விம்மி அழுதான். பரீட்சையில் இரத்தினம் முதன்மையாகச் சித்தியடைந்தான். ஆனால் இரத்தினம் அழுதகாரணம் அறியாது ஆசிரியரும் வகுப்பு மாணவர்களும் திகைத்தனர் பின்னர்தான் தனது நண்பர்களிற் சிலர் சித்தியடையாத காரணத்தால் இரத்தினம் அழுதான் என்பதை அறியமுடிந்தது.

திருநெல்வேலி சைவச்சிறுவர் இருந்தவிடுதியில் இரத்தினம் இருந்தகாலத்தில் இன்று காணப்படுகின்ற வசதிகள் அன்று இருக்கவில்லை. இன்று காணப்படுகின்ற திருநெல்வேலி சைவச்சிறுவர்கள் விடுதியில் படிப்பதற்கு மேசை, கதிரை வசதிகள் படுப்பதற்குக் கட்டில், போர்வை, தலையணை போன்ற வசதிகள் மின்பொறி வெளிச்சவசதிகள் அன்று இருக்கவில்லை. இதனால் இரத்தினம் படிக்கும்போது பழைய கடகமோ அல்லது பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் இறைக்கும் பட்டையோ வைத்து அதனில் குப்பி விளக்கை வைத்துப் படிப்பான். காற்றினுற் குப்பி விளக்கு அணையாமலும் குப்பிவிளக்கின் வெளிச்சத்தி னுல் நண்பர்களின் உறக்கம் கெடாமலும் இருக்கவே அவ்வாறு செய்தான் என்று அவர் குருவாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அடிக்கடி கூறுவார், ஈழநாட்டுப் பத்திரிகையிலும் எழுதுவார்.

ஆசிரிய கலாசாலை மாணவனுய் இருக்கையில் இரத்தினத்தின் புத்திக்கூர்மை, தெளிவான பேச்சுவன்மை முதலியவற்றைக்கண்ட பண்டிதமணி அவர்கள் பல தமிழ் நூல்களைத்தானே தோளிற்சுமந்துவந்து கொடுத் தார். "நீ மிகமிகக்கெட்டிக்காரன் ஒருகாலத்தில் மாபெரும் மேதையாக நீ வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உன்னிடம் காணப்படுகின்றன" என்று கூறிவிட்டுச் சென்ருர்.

பண்டிதமணி அவர்கள் கொண்டுவந்த நூல்களை ஒன்ருென்ருக இரத்தினம் எடுத்துப்பார்த்தான். பலவகை யான இலக்கிய நூல்கள், சைவசித்தாந்த நூல்கள், புராணங்கள் என்பன காணப்பட்டன. இரத்தினம் விழித் தான். செய்வதறியாது திகைத்தான்.

இரத்தினம் பதினுன்குவயது இளைஞனுக இருந்த காலத்தில், பாரதநாட்டுப் புதல்வர் மகாத்மா காந்திஜீ அவர்கள் சேர் பொன் இராமநாதன் கல்லூரிக்குவந் தார், நற்போதனைகள் செய்தார். மனிதன் மனிதனுக வாழவேண்டின் ஆதாரக்கல்வி கற்கவேண்டும். அனுட் டிக்கவேண்டும். என்பதுபோன்ற கருத்துக்களை அன் றைய மாணவ, மாணவிகள் முன்வைத்தார். இவற்றை யெல்லாம் வாரியுண்ட இரத்தினத்தின் சிந்தனைகள் மகாத்மாகாந்திஜீயின் அடியையொற்றிச் சென்றது.

"நாயின் வாலை நிமிர்த்த முடியுமா" சமயகுர வர்கள், எத்தனையோ அருளாளர்கள், புத்தர், யேசு போன்ருேர் உலகில் அவதரித்தார்கள். மக்கட்கு நல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதேசம் செய்தார்கள். இப்போதும் எத்தனையோ மேதாவிகள் பிரசங்கம் செய்கிறார்கள். எழுதுகிறார்கள் இவர்களே உலகத்தைத் திருத்த முடியவில்லையாம். என்றால் என்ன சாதிக்க முடியும்? என்ற வகையிற் சிந்தித்த இரத்தினம், சொல்வதைச் சொல்வதுபோல் செயலாற்றும் காலத்தை எதிர்பார்த்தவனுக்குப் பண்டித மணியின் செயல் திகைப்பையும், ஏக்கத்தையும் அளித்தது.

பண்டித மணியின் வாழ்க்கைச் சரித்திரம் அற்புதமானது. பதினெட்டு வயதுவரை கல்வி கேள்வி ஞான வாசனை எதுவுமின்றி மாட்டுவண்டிச் சவாரியில் தனியின்பம் கண்டு, அதனை அனுபவித்து வந்தார். ஈழ மாதா செய்த மாதவமோ அல்லது தமிழ் ஆசிரியர் களின் பூர்வ புண்ணியமோ எதுவோ பண்டிதமணி யவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் மருகராகிய திரு கைலாசபதியிடமும், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவ ரிடமும் சிறப்பாகப் பாடம் கேட்டார். கற்க வேண்டிய இலக்கணம், இலக்கியம், கணிதம் முதலாகச் சைவசித் தாந்தம், புராணங்கள், இதிகாசங்கள், சமஸ்கிருதம் முதலிய பல நூல்களையும் ஆசறக் கற்றுத் தெளிந்தார். பண்டிதமணிப் பட்டமும், பிற்காலத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார்.

ஆயிரம் மாணவர்கள்வரை பண்டிதமணி அவர் களிடம் பாடம் கேட்டனர். பண்டிதமணி அவர்கள் தமிழிற்கும், சமயத்திற்கும் ஆற்றிய சீரிய பணிகள் எண்ணிறந்தவை யாகும். ''அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி'' என்றுங்கு பண்டிதமணி அவர்களின் அடியை யொற்றித் தமிழிற்கும், சைவத்திற்கும் சிவப்பணி செய்யும் பண்டித மணியின் மாணவர்கள், அபிமானிகள் இன்றும் எம்முடைய காலத்தில் இருப்பது நாம் அவர் களைத்தரிசிப்பது எல்லாம் பூர்வ புண்ணியமாகும்.

பண்டித மணியிடம் பாடம் கேட்ட எண்ணிறந்த மாணவர்களில் இலக்கிய இரசிகமணி கனக செந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன், ஆத்ம ஜோதி நா. முத்தையா குருதேவர் அவர்கள், ஈழத்துச் சித்தர் வரிசையில் அவதரித்த தவத்திரு. சிவயோக சுவாமிகள் பிரதம சிஷ்யர் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆத்மஜோதி முத்தையா குருதேவர் அவர்கள் ஆசிரியப் பணியுடன் சைவப் பிரசங்கத்தையும் மலைநாட்டில் ஆரம்பித்தார். இலங்கை முழுவதும் இப்பணி பரந்து சென்றது. கடல் கடந்து இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கோலாலம்பூர், போன்ற இடங்களில் தேன்பாயும் கன்னித் தமிழால் சைவப் பிரசங்கம் செய்து பெரிய பல நூல்களையும் யாத்தார்.

தனிப்பிரார்த்தனை, கூட்டுப்பிரார்த்தனை, வீட்டுப் பிரார்த்தனை என்பவற்றின் அவசியத்தையும், திருமுறைகளை இடைவிடாது ஓதுவதால் ஏற்படுகின்ற, பயன்பாடுகளையும் தற்போது பாதயாத்திரை மூலம் பாமர மக்கள் முதல் படித்த பண்டிதர் வரை ஈர்க்கக்கூடிய தன்மையில் சாதனைப்டுத்தி வருகின்றார். இவர் நைமிட்டியப் பிரமச்சாரி யென்பது குறிப்பிடத்தக்கது.

நாவற்குழி தவத்திரு செல்லத்துரைச் சுவாமிகளும் குடும்பத் தொடர்பற்றுத் துறவியாகவே இருந்து தவத்திரு சிவயோக சுவாமிகளைக் குருவாகக் கொண்டு இன்று மட்டக்களப்புச் செங்கலடி சிவதொண்டனில் இருந்து கீழ்மாகாணச் சைவமக்கட்கு அறப்பணிகள் செய்கின்றார். சைவசமய அபிவை இலகுவில் சைவ மாணவர்கள் பெறுவதற்காக வருடந்தோறும் சைவ சமயப் பாடப்போட்டி நடத்திப் பரிசில்கள் வழங்கியும் வருகின்றார். பல நூல்களையும் யாத்து மக்களைப் பயனடையச் செய்கின்றார்.

பண்டித மணியின் அபிமான வாரிசுகளில் பெண்கள் வரிசையில் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி சித்தாந்த சாகரம் அப்பாக்குட்டி தங்கம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நைமிட்டிகப் பிரமச்சாரிணி. இவர்கள் சைவத்திற்கும் தமிழிற்கும் பெண்ணுலகிற்கும் அளப்பரிய பணிகள் புரிந்து வருகின்றார். இவர்களின் பணி கடல் கடந்து இங்கிலாந்து, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா வரை படர்ந்து பரந்து, காணப்படுகின்றது. அம்மையாரின் பிரசங்கம் என்றால் அழுத பிள்ளையும், அடம் பிடிக்கும் குழந்தையும் மௌனியாகி விடும். குக்குடு முதியோர், இளைஞர், பாமரமக்கள், படித்த மேதாவிகள் அம்மையாரின் சைவப் பிரசங்கத்தைச் செவி மடுக்கத் திரள், திரளாகக் கூடுவார்கள். இத்தகைய அம்மையார் தற்போது தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலயத்தின் தலைவியாகவும், அக்கிராமத்தின் சமாதான நீதவானாகவும் இருந்து செய்கின்ற அறப்பணிகள் அளவிடற்கரியவையாகும்.

பல நூற்றுக்கணக்கான ஆதரவற்ற பெண்குழந்தைகளை ஆதரித்து உணவு, உடை, உறையுள் அளிக்கின்றார். அயலில் உள்ள ஆலயங்கள், வைத்திய சாலைகள் ஆதீனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் வாரி, வாரித் தேவையானவற்றை வழங்கிவருகின்றார் அன்னையின் பணி அன்னைக்கன்றி அன்னையைச் சார்ந்தவர்க்கும், ஆலயம் வழிபடுவோர்க்கும் பயனளிக்கின்ற தென்றால் மிகையில்லை.

இவ்வாறு பண்டிதமணி ஐயாவின் மாணவர்களினதும், அபிமானிகளினதும் பணிகள் பலருக்கும் பயனளிக்கின்றன. இரத்தினமும் பண்டிதமணி ஐயாவின் மாணவன் மட்டுமல்ல அபிமானியும், பிரதம சிஷ்யனும் ஆவான். இரத்தினத்தின் பேச்சின்தொனி, செயற்பாடு, நடை யாவும் பண்டிதமணி அவர்களின் தன்மைபோன்ற தனால் இரத்தினத்தைச் " சிஷ்யன் " என்று குறிப்பிடுகின்றேன். இரத்தினம் நல்ல எழுத்தாளனாகவும், பேச்சாளனாகவும் விளங்கவேண்டுமெனப் பேரார்வல் கொண்டார், ஆனால் இரத்தினத்தின் சிந்தனை வேறுவிதமாக அமைந்ததைப் பிற்காலத்திலேதான் பண்டிதமணியால் உணரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

(திருக்குறள்)

ஆசு + இரியன்— ஆசிரியன். ஆசு என்றால் குற்றம் இரியன் என்றால் களைபவன். எனவே ஆசிரியன் என்ப தன் பொருள் மாணவர்களின் குற்றங்களைக் களைந்து அறிவைப் புகட்டுபவன் என்பதாகும்,

இரத்தினம் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றதும், ஆசிரியப்பதவி பெற்றார். திருநெல்வேலி சைவச்சிறுவர் விடுதியில் வாழ்ந்த காலந்தொட்டு ஆசிரியப் பயிற்சிமுடித்து நல்லதோர் ஆசிரியனாக வெளியுலகிற் பணிபுரிய வரும்வரை இரத்தினம் பழக்கவழக்கம், பணிவு, உண்மைபேசுதல், விவேகம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தன்மைகள்பற்றி இன்றும் சகமாணவர்கள் பாராட்டிய வண்ணம் இருக்கின்றார்கள் என்றால் இரத்தினத்தின் சீரியவாழ்க்கை பற்றிக் கூறவும், எழுதவும் வேண்டுமோ.

நன்னூலார் கூறும் மாணவர் இலக்கணம் இரத்தினத்தின் மாணவப்பருவத்தில் அமைந்திருந்ததுபோல நல்லாசிரியனின் இலக்கணமும் இரத்தினத்திடம் அமைந்து காணப்பட்டது. இப்போது இரத்தினம் திரு. வே. கதிரவேல் என்ற நாமத்துடன் ஆசிரியப்பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

திரு. வே. கதிரவேல் ஆசிரியர் அவர்களிடம்

"குலனருடெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோடுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரியனே"

(நன்னூல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பவணந்தி முனிவர் கூறும் நல்லாசிரியர்ப் பண்பு மிருந்து காணப்பட்டது,

"ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்கை யறிந்தவ னுளங்
கோட்டமின் மனத்தினூல் [கொளக்
கொடுத்த லென்ப"

(நன்னூல்)

என்றபடி ஆசிரியர் திரு. வே. கதிரவேல் அவர்கள் படிப்பிக்கும் பண்பு காணப்பட்டது. இவ்வாறு ஆசிரியர் யாழ்குடாவிலும், மலைநாட்டிலும் கல்வி கற்பித்தார். அவர்கள் கற்பித்த பாடசாலைகள், வித்தியாசாலைகள், வித்தியாலயங்களில் மிகமிக முக்கியமான பாடசாலைகள் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை தமிழ்க் கலவன் பாடசாலை, கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம், பேராதனை மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயம் என்பனவாகும்.

பிரம்மச்சாரிய வாழ்க்கையே நடாத்த எண்ணியிருந்த இவ்வாசிரியருக்கு அதைவிட்டுக் கிருகஸ்த வாழ்க்கை நடாத்தவேண்டும் என்ற மாறுதலை அறிவுறுத்த வந்ததுபோல ஒருமுறை நெருப்புக்காய்ச்சல் வந்துவிட்டது. ஆசிரியரின் உறவுமுறையான ஒன்றுவிட்ட சகோதரி தனது ஒன்றுவிட்ட அண்ணர் ஆசிரியரை மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கச்செய்தார்.

எழுவைதீவைச் சேர்ந்த திரு. நாகமணியின் மகளான செல்வி சின்னம்மா என்பவர் ஆசிரியரின் ஒன்றுவிட்ட சகோதரியின் உயிர்ச் சிநேகிதியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் மானிப்பாய் வைத்தியமனையில் மருத்துவத் தாதிகளாகப் பணிபுரிந்தனர். இதனால் ஆசிரியரின் நோய் குணமாகும்வரை செல்வி சின்னம்மாவிடம் அவ்வாசிரிய ருக்குச் சுசுரூஷை செய்யும் பொறுப்பு விடப்பட்டது.

செல்வி சின்னம்மா நோயாளியாகிய ஆசிரியரை அன்புடன் நோக்கினர். வைத்தியரின் ஆலோசனைப்படி செல்வி சின்னம்மா இரவும், பகலும் ஆசிரியருக்குச் செய்த பணிவிடை நயத்தால் விரைவிலே நோய் குண மாகிவிட்டது. செல்வி சின்னம்மாவின் அழகிலும் பார்க்க, அவரின் குணம், நடை, பேச்சின் இங்கிதம் யாவும் ஆசிரியரைக் காந்தம்போல் ஈர்த்தமையால் அவரைத் துணைவியாக்க விரும்பினர்.

காந்தீயத் தத்துவ ஆதாரக் கல்வியை நடை முறைப்படுத்த வாழ்க்கைத் துணைவியின் துணை இன்றி யமையாதது என்றுணர்ந்த ஆசிரியர் அவர்கள், குப் பிளான் சரவணைச் சுவாமியின் சிஷ்யையாகிய தவத்திரு. அருட்சோதி அம்மையாரின் ஆசியுடன் செல்வி சின்னம் மாவை வாழ்க்கைத்துணைவி ஆக்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.
துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை "

(திருக்குறள்)

இல்லறமாகிய நல்லறத்தைத் திரு., திருமதி கதிரவேல் சிறப்பாக நடத்தினார்கள். அவர்கள் இல்லறத்தை மேன்மைப்படுத்த முருகதாஸ், நீலாம்பிகை, விமலாம்பிகை ஆகிய குழந்தைகள் பிறந்தார்கள். இக்காலத்தில் திரு. வே. கதிரவேல் ஆசிரியர் அவர்கள் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பொறுப்பேற்றுக் கடமையில் ஈடுபட்டார். இதனால் அவர்களுடைய குடும்பமும் அங்கு குடியேறியது.

யாழ்ப்பாணத்திற்கும் கண்டிக்கும் செல்லும் பிரதான வீதியில் கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும் வீதிக்கண்மையில் இம்மகாவித்தியாலயம் காணப்பட்டது. அக்காலத்தில் இது கஷ்டப்பிரதேசமாகக் கணிக்கப்பட்டிருந்தது; போக்குவரத்து வசதியற்ற காட்டுப்பிரதேசமாகையால் சனங்களின் நடமாட்டம் மிகக்குறைவாகவே காணப்பட்டது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள வித்தியாலயத்திற்கு நல்லாசிரியர்கள் கடமையேற்க மறுப்பதுண்டு.

திரு. வே. க. ஆசிரியரின் வருகை இம் மகாவித்தியாலயத்திற்கு வரப்பிரசாதமாகக் காணப்பட்டது நல்லாசிரியர்களைத் தன் பேச்சுவன்மையின் சாதுரியத்தால் வரவேற்றார். அக்காலத்திற்றானே விஞ்ஞானச் செயற்கூடத்தையும் செயற்படுத்தி மாணவரின் கல்வி அறிவு வளர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகக் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலிசை முதலியவற்றை வளர்க்க வாத்தியங்களைப் பயன்படுத்தினர், மாணவர்கள் பேச்சுவன்மை, எழுத்துவன்மை அடைந்து நாட்டின் முதுகெலும்பாக இருக்கவேண்டுமென அயராது உழைத்தார். உதாரணமாக ஒருசம்பவத்தைக் குறிப்பிடுகின்றேன்.

க. பொ. த, படித்த மாணவியைப் பேச்சுப் போட்டிக்கு ஆயத்தம் செய்தார். அம்மாணவி திரு. வே. க. அதிபரைப்போலவே அழுத்தம், திருத்தமாகவும். தெளிவாகவும், கேட்போரை ஈர்க்கும்படிபேசி முதலிடத்தைப்பெற்று எல்லாரிடமும் பெருமதிப்பைப் பெற்றார். சிலகாலத்தின்பின் அம்மாணவியுடன் படித்த மாணவன் திருமணம் செய்தான். குடும்பத்தில் ஊடல்வந்தபோது அம்மாணவி பிரசங்கம் செய்வதுபோல அதாவது மேடைப் பேச்சுப்போலத் தனது துணைவனை ஏசினள்.

அதேநேரத்தில் அதிபர் அவ்வொழுங்கையால் சென்றுகொண்டிருந்தார், கணவர், இதுதானா கதிரவேல் அதிபரிடம் படித்தாய். அதிபர் பேசத்தானா படிப்பித்தார் என்று அடி அடியென்று அடித்த நிகழ்ச்சிகளை அறியக்கூடியதாக உள்ளது.

அதிபர் அவர்களின் துணைவி அவர்கள் கற்பினுக்கணிகலமாகவும், பெண்களில் மாணிக்கமாகவும் காணப்பட்டார். போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்தில் வயற்செய்கைக்காகவும், வேறு தொழிலுக்காகவும் மக்கள் உருத்திரபுரம் வருவதுண்டு. அவர்கள் அதிபரின் வீட்டிலும் தங்குவார்கள். இவர்களை இன்மொழி பகர்ந்து அம்மையார் உபசரிப்பார்கள். தினமும் முப்பது விருந்தினர்க்குக் குறையாது அம்மையாரிடம் வருவார்கள். அம்மையாரிடம் செல்விருந்தோம்பி வருவிருந்தை எதிர்நோக்கும் வழக்கமும் இருந்தது.

உருத்திரபுரத்தில் மனோன்மணி சமேத உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் புனருத்தாரணம் செய்யவேண்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார்கள் இங்கு வருகைதந்தார்கள். உருத்திர புர ஆலயம் வேதகாலத்தில் இருந்ததாகச் செவிவழி வந்த செய்திகள் அதிபர் காலத்தில் இருந்தது.

தேவர்கள் ஒருகாலத்தில் இவ்வாலயத்தை அமைத்து வணங்கினர்கள். பின்னர் இவ்வாலயம் சிதைந்து இருப் பதைப் பிற்காலத்துச் சோழமன்னன் இலங்கைக்கு வந்த போது கண்டான். தனது ஆட்சிக்காலத்திலேயே சிங்கள மக்கள், தமிழ் மக்கள் ஆகியோரைக்கொண்டு இவ்வால யத்தைப் புனருத்தாரணம் செய்தான். சிலகாலத் தின் பின்வந்த போர்த்துக்கேயர் இவ்வாலயத்தைத் தரைமட்டமாக்கி விட்டனர்.

1956-ம் ஆண்டில் தவத்திரு. வேலாயுதசுவாமி, தவத்திரு. வடிவேற்சுவாமி ஆகியோர் இப்பிரதேசத்தில் குடில் அமைத்துத் தவம்செய்தனர். அப்போது தவத்திரு. வேலாயுதசுவாமி கனவுகண்டு நிலத்தைக்கிளற நாற்சதுர முடைய ஆவுடையார்வந்தது. சுற்றுமுற்றும் பார்த்த போது ஆலயம் அழிந்ததற்குரிய அறிகுறிகள் காணப் பட்டன.

இதன் அதிசயத்தை அக்கால யாழ் அரசாங்க அதிபருக்கு அறிவித்தனர், இவ்வாலயத்தின் அருகில் பாழடைந்த பெரியகுளமும் காணப்பட்டது. இக்குளத் தைத் திருத்தி வயல்செய்யவும், கிறிஸ்தவ ஆலயம் கட்ட டவும், கிறீஸ்தவ குடும்பங்களைக் குடியேற்றவும், கிறீஸ் தவப் போதகர்கள் ஆயத்தம் செய்வதை யாழ்ப்பாணம் சித்தவரிசையில் உள்ள தவத்திரு சிவயோக சுவாமிகள் ஞானதிருஷ்டியில் உணர்ந்து, சிறுத்தொண்டு தவத்திரு. வடிவேற் சுவாமிகளுக்கு உணர்த்தினர். சுவாமிகள், அதி பர், மற்றும் சில சைவப்பெரியார்கள் ஒன்றுகூடி இவ் விடத்தில் ஆலயம் ஒன்றைத் தாபித்தார்கள். நாற்சதுர முடைய ஆவுடையாரில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட லிங்கத்தை வைத்தனர். இந்தியாவில் இருந்தே உருத்திரபுரேஸ்வர சமேத மனோன்மணி அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாள் கொண்டுவரப்பட்டு, உருத்திரபுர ஆலயத்தை அமைத்து மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலய வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் திரு. வே. க. அதிபர் அவர்கள் அல்லும் பகலும் பெரும்பணியாற்றினர்.

தவத்திரு வடிவேற் சுவாமிகள் எந்தர் மடத்தில் உள்ள வேதாந்த மடப் பீடாதிபதி தவத்திரு மகாதேவ சுவாமிகளின் சிஷ்யர்களில் ஒருவராவர். சுவாமிகள் தமது இளமைக்காலத்தில் இங்கு வந்து சைவ சமயப் பயிரைப் பாதுகாக்கத் தொடங்கியது தவத்திரு சிவயோக சுவாமிஜீ அவர்களின் பணிப்பாகும்.

இக்காலத்தில் எட்டாம் வாய்க்காலில் திரு சி. வேலாயுதம் என்பவர் "காந்தி நிலையம்" என்ற ஆண்கள் விடுதியொன்றை நிர்வகித்து வந்தார். இந் நிலயத்திற்கு அத்திவாரம் இட்டவர் பாரத நாட்டின் சர்வோதயத் தலைவரும் யாழ்ப்பாணத்து வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு அரிய நாயகம் என்பவராவர். இத்தாபனத்தில் பெற்றோர் இல்லாத ஆண்குழந்தைகளே காணப்பட்டனர். இத்தாபனம் வளர்வதற்காக அதிபர் திரு வே. க பெரிதும் முயன்றார்.

அதிபர் அவர்கள் சமய வாழ்வில் அதிகபற்றுக் கொண்டார். இதனால் தவத்திரு வடிவேற் சுவாமிகளிடம் வைராக்கிய சதகம், கைவல்லியம் முதலிய வேதாந்த நூல்களைப் பாடம் கேட்டார். தாயுமானவர் பாடல் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள் கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை முதலியவற்றையும் பாடம் கேட்டார். தனது ஓய்வான நேரமெல்லாம் சுவாமிகளிடம் பாடம் கேட்டார். இவர் பாடம் கேட்ட நூல்களில் இவர்களின் மனதைக் காந்தம்போல ஈர்த்த நூல் தாயுமானவர் பாடல். அதனால் அப்பாடல்களைக் கடதாசியில் எழுதி மிதிவண்டி, பஸ்வண்டியிற் போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும், வயலில் வேலை செய்யும் போதும் அவைகளை மனனம் செய்தார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்"

(பாரதிபாடல்)

தனிமனிதனும் தன்கைகளை நம்பி வாழவேண்டும் தன்காலில் நின்றுவாழும் தன்னம்பிக்கை வேண்டும். இதற்குப் பாரத நாட்டுக்குச் சுதந்திரம் தேடித்தந்த மகாத்மா காந்திஜீ கண்ட "ஆதாரக் கல்வியே" வழி காட்டும் என்பதை திரு. வே. க. அதிபர் தெளிவாக உணர்ந்தார், தனது இளமைக் காலச் சிந்தனைச் செயற் பாடுகள் கைகூடவும் வழிதிறந்தது போல 1960 ம் ஆண்டு சம்பள மற்ற இருவருட லீவில் ஆதாரக் கல்விப் பயிற்சி பெற இந்தியாவில் உள்ள இர்துமதக் குருகுலத் திற் சேர்ந்து பயிற்சி பெறத் தொடங்கினர்,

வாலாசாபாத் இந்துமத பாடசாலையை நிறுவியவர் உயர் திரு மாசிலாமணி என்பவராவர், இவர் நைமிட் டியப் பிரமச்சாரி. இப்பாடசாலையில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றனர். இப் பாட சாலை விடுதியாகிய குருகுலமும் விஸ்தரிக்கப் பட்டதாகக் காணப்பட்டது. எனவே விடுதியையும், பாடசாலையையும் நிர்வகிக்கும் பொறுப்பு மாணவரிடம் ஒப்படைக்கப் பட்டது.

ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு மந்திரிகள் மாணவரிடையே தெரியப்பட்டனர். எல்லா மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் மந்திரிமார்களையும், நான்காம் வகுப்புப் படிக்கும் ஒரு எட்டுவயதுச் சிறுவன் ஜனாதிபதியாக இருந்து கண்காணித்து வந்தான். அவனுடைய ஆளுமையின் வன்மையால் சிறுவர், இளைஞர், எல்லோரும் கட்டுக் கோப்புக்குள் அடங்கிக் கருமம் ஆற்றினர்.

அந்நியரின் இறக்குமதிப் பொருட்களை மகாத்மா காந்திஜீ காலத்திலேயே இந்தியாவிற் தடை செய்தமையால், சகல பொருட்களும் இந்தியாவில் உற்பத்தி செய்யப் பட்டன. உணவு, உடை ஆதியன மனிதனுக்கு முக்கியமான பொருட்களாகும். இவற்றைவிட மற்றைய அத்தியாவசியமான பொருற்களும் இந்தியாவில் உற்பத்தி செய்தமையால், இந்தியா இன்னோர் நாட்டைக் கையேந்த வேண்டாத நிலை இருந்தது.

இலங்கை அக்காலத்தில் சுய உற்பத்தியில் பின் தங்கிக் காணப்பட்டது. உணவு, உடை முதலியன வற்றிற்கு அயல் நாடுகளின் கைகளில் இருந்த நிலையைத் திரு. வே. க. அபிபரின் சக மாணவர்கள் நன்கு அறிந்தமையால் "எஜயா அண்ணாச்சி உங்க நாட்டிலே விளையும் தேயிலை' றப்பர் முதலியன உண்ணலாமா, உடுக்கலாமா அண்ணாச்சி சொல்லுங்கோ" என்று கேலிசெய்யும் போதெல்லாம் திரு. வே. க, மனம் வெதும்பி அழுதது.

திரு. வே. க. அதிபர் அவர்கள் தனது ஆதாரக் கல்விப் பயிற்சியை இரண்டு வருடத்திற் பூரணப்படுத்தினார். தனது கைகளாற் பருத்திப் பஞ்சைக் கடைந்து அடித்துப் பட்டை ஆக்கினார் பின்னர் தக்கிளியில் நூல் நூற்றார். இராட்டினத்தில் நூல் சுற்றினார். தறியில் தனக்கு வேட்டி சால்வையும், அம்மாவிற்குச் சேலையும் நெய்தார். இவற்றை யெல்லாம் கண்ட சகமாணவர்கள் "அண்ணாச்சி இனிமேல் இலங்கையில் நெசவு நெய்யப் போகிறீர்களோ" என்று கிண்டல் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திரும்புவதற் கிடையில் இந்தியாவில் பரந்து காணப்பட்ட குருகுலங்கள், ஆதீனங்கள் அறச்சாலைகள் மற்றும் தர்மத் தாபனங்களைப் பார்வையிட்டார். இவைகளில் அதிபரின் மனதைக் கவர்ந்து ஈர்த்த தாபனங்கள் இரண்டு. ஒன்று தயாள் பாக் தாபனம் மற்றயது அரவிந்தர் ஆச்சிரமம்.

தயாள் பாக் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அடக்கிய தாபனமாகும். இங்கு பலதிறப்பட்ட மக்கள் சாதி, மத இன வேறுபாடின்றி "ஒன்றே குலம் ஒருவனே, தேவன்" என்ற குறிக்கோளுடனும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற தாரக மந்திரத்துடனும் வாழ்கின்றனர்.

நோயாளிகள் குழந்தைகள் முதியோர் தவிர்ந்த மற்றையோர் தினம் ஒரு மணித்தியாலம் வயலில் சிவப்பணி செய்தல் வேண்டுமென்ற விதி இருந்தது. எல்லோரும் அவ்விதிக்குக் கட்டுப்பட்டுக் கர்மம் ஆற்றினர். இங்கே இல்லறத்தார், துறவறத்தார் பிரமச்சாரிகள் எல்லோரும் வாழ்ந்தனர்; அவரவர்களும் தங்கள் கடமைகளை கருத்துடன் கடமையாற்றினர்.

அரவிந்தர் ஆச்சிரமம் ஒருபெரும் பிரதேசத்தை உள்ளடக்கியது. இங்கு ஆத்மீக வழிபாடு தொடக்கம் சகல துறைகளும் காணப்படுகின்றன. தனித்தனியாகவும், குடும்பம் குடும்பமாகவும் மக்கள் வாழ்கின்றனர். ஆரம்ப பாடசாலை, உயர்தரப் பாடசாலை முதற்பல் கலைக் கழகம் வரையும் காணப்படுகின்றன. வைத்திய சாலை, கூட்டுறவுப் பண்டகசாலை முதலியனவும் இங்கு காணப்படுகின்றன. தச்சுத்தொழில், நெசவுத்தொழில் போன்ற இன்னோரன்ன தொழிற்பேட்டைகளும் இங்கே காணப்படுகின்றன. ஒரு மனிதனுக்குத் தேவையான அத்தியாவசியமானவை யெல்லாம் இங்கே உற்பத்தி செய்து இங்குள்ளவர்களின் பாவனைகட்கு உதவுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிச்சேரி அல்லது புதுச்சேரி முழுவதையும் உள்ளடக்கிய அரவிந்தர் ஆச்சிரமத்தில் உற்பத்தியாகும் எப்பொருளும் பாண்டிச்சேரியை விட்டு வெளியே கொண்டுபோகக்கூடாது. அதுபோல இங்கு கல்வி பயில்வோர் வெளியில் வேலைவாய்ப்புப் பெறமுடியாத நிலைமையினுல், எல்லோரும் இங்கு கட்டுக்கோப்புடன் வாழ்கின்றனர். இவற்றையெல்லாம் பார்வையிட்ட அதிபர் திரு. வே. க. அவர்கள் இங்கு சிலநாட்கள் தங்கினுர். ''நாம் உருவாக்கப் போகும் ஆதாரக்கல்விக் குருகுல விடுதியும் இவ்வாறு அமையவேண்டுமென'' அன்றே அவ்விடத்திலேயே பிரார்த்தனை செய்தார்.

ஆச்சார்ய விநோபாவே அடிகளின் ஆதரவில் சர்வோதயம். கிராமோதயம்" ஆகிய பத்திரிகைகள் வெளிவருவதை அறிந்த அதிபர் அவர்கள் அதன் அங்கத்தவராகச் சேர்ந்தார். தனது இந்தியச் சகமாணவர்கள் ஏளனம் தாங்கமுடியாத அதிபர் அவர்கள் தாம் நிறுவும் ஆதாரக் குருகுலத் தொழிற்பேட்டையில் நெசவுத் தொழில் முக்கிய இடம்பெற வேண்டுமென்பதற்காக நெசவுத்தொழிலிற்கு இன்றியமையாத நூல் நூற்கும் உபகரணங்கள், நூல் சுற்றும் ராட்டினப் பெட்டிகள்,, சர்வோதய நூல்கள், சவற்காரம் செய்வது எப்படி? தூரிகை எப்படிச் செய்கல். விவசாயம், அச்சுக்கலை போன்ற தொழில்களை எவ்வாறு நடத்தலாமென்று அறிவிக்கும் ( நூல்கள் ) புத்தகங்களையும் காந்தியத் தத்துவம், விநோபாவே அவர்களால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளையும் இவ்விடம் கொண்டுவந்து சேர்த்தார்.

தலயாத்திரை யென்றும் படிக்கவென்றும் இந்தியா செல்வோர் வியாபாரப் பொருட்கள், நவநாகரிகப் பொருட்களுடன்வந்து இறங்குவதை இன்றும் காண்கின்றோம். ஆனல் அதிபர் அவர்களின் யாத்திரை, படிப்பு ஆதியன, தனிமனிதனும் தன் கைகளை நம்பி வாழ வேண்டுமென்ற குறிக்கோளுடன், அக்குறிக்கோள்களைச் செயற்படுத்தும் உபகரணங்களுடன் அவர்களின் சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைகள் ஆக்கமுயற்சிக்கு வித்திட்டன என்பதை அவர்கள் இயற்றிய அறப்பணிகள் பறைசாற்றுவதைக் காணமுடிகின்றது.

மீண்டும் ஆசிரியர்; அதிபர் பதவியையேற்றுக் கடமையாற்றும் பணியை மேற்கொண்டு பேராதனை தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்றார். அங்கும் திறம்படத் தம் கடமைகளைச்செய்து மலைநாட்டு மாணவர்களின் மதிப்புடன் பொதுமக்களின் பாராட்டையும் பெற்றார். விடுமுறையின்போது தமது குடும்பத்துடன் புகைவண்டி மூலம் யாழ்நகர் வந்தார். துணைவியாரும் பிள்ளைகளும் புகைவண்டியின் இருக்கைப் பெட்டியுள் இருந்தனர் அதிபர் மட்டும் வேறுசிலருடன் புகைவண்டியிலேறும் வாசலில் இருந்து தனது இருகால்களையும் கீழே தொங்கப்போட்டபடி வந்தார்.

இடைவழியில் அந்தோ! அதிபரின் கால்கள் இரண்டும் மின்கம்பத்தில் மோதியது. இதனால் அதிபர் மயங்கிக் கீழே விழப்போகும் சந்தர்ப்பத்தில், உடன் நின்றவர்களிற் சிலர் அதிபரைப்பிடித்து உள்ளே இழுத்து எடுத்தனர். அவர்கள் அன்று அப்படி, இன்று அப்புஜீ என்றழைக்கும் அதிபரைப் பாதுகாத்திருக்காவிட்டால் அன்றே அப்புஜீ அவர்களின் வரலாறு முடிந்திருக்கும். அடியேன் இக்கட்டுரை எழுதவேண்டிய அவசியமும் இல்லை. குருகுலம், குருகுலக்கோயில் மற்றும் தொழிற் பேட்டைகள் கட்டப்பட்டிருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

''என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மைதீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள் குருநாதன்

அப்புஜீ அவர்களின் இருகால்களும் நன்றாகப் பாதிக்கப்பட்ட காரணத்தால் மயக்கத்தால் கட்டை போலப் படுத்திருந்தார். அப்போது துணைவியும் மக்களும் கதறிக், கதறி அழுதனர். வெந்தழலிற் பட்ட புழுப் போலத் துடித்தனர்.

கிளிநொச்சி செய்த பூர்வ புண்ணியமோ, அல்லது ஆதரவற்ற மாணவர்களின் நல்ல காலமோ ஒருவாறு அப்புஜீ அவர்கள் மயக்கம் தெளிந்தது ''என்னைக் கிளி நொச்சி மகாதேவா ஆச்சிரமக் குருதேவரின் முன்நிலையிற் கொண்டு போய்ப் போடுங்கள்'' என்றார்.

மகாதேவா ஆச்சிரம சுவாமிஜீயின் முன் கால்கள் பாதிக்கப்பட்ட வண்ணம் அப்புஜீ அவர்கள் படுத்திருந்த நிலை மிகவும் பரிதாபமான காட்சியாகவே காணப்பட்டது. அன்றே அப்புஜீ அவர்கள் தமது குடும்ப உறவு வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அன்றே தன்னுடல் பொருளாவி யனைத்தும் அறப்பணிக்கு அர்ப்பணித்தார். ''இன்று இச்சம்பவம் எனது உயிரைப் பிரித்திருந்தால்'' எனவே ''நான் அறப்பணியில் என்னைப் பூரணமாக அர்ப்பணித்து விட்டேன்'' என்று துணைவியிடம் கூறினார். எவ்வாறோ அவர்களுடைய கால்கள் பிரிக்காது குணமாகி விட்டன. தனது உள்ளப் பாங்கை அம்மாவிற்குக் கூறினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாங்கல்யம்" கிடைத்த பூரிப்பால் அம்மையாரும் தலைவனின் அடியை யொற்றி நடக்கச் சித்தம் கொண்டார்.

கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயத்தில் அதிபராக இருக்கும் பொறுப்பு அப்புஜீக்குக் கிடைத்தது. இக் காலத்தில் அப்புஜீ அவர்களின் சிந்தனைகள் செயற்படுத்தற் கேற்ற சூழ்நிலைகளும் பொருந்தி இருந்தன.

திருநெறிக் கழகம், கரைச்சிச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இரண்டும் இணைந்து சைவப் பிள்ளைகள் கல்வி பயில இந்துமகா வித்தியாலயத்தை நிறுவியது. இச் சங்கத்திற்கென ஐம்பது ஏக்கர் நிலமும் மூவாயிரம் ரூபா பணமும் இருந்தது.

கிறீஸ்தவ மதத்தையும், சமூகத்தையும் வளர்ப்பதற்காகக் கிறீஸ்தவ மதத்தினர் கிளிநொச்சிப் பட்டினத்தில் கருணைநிலையம், கிறீஸ்தவ தேவாலயம், சென் திரேச பெண்கள் மகாவித்தியாலயம், பரந்தன் முரசு மோட்டையில் நவஜீவனம் சிறு தொழிற்சாலை, ஜெயந்தி நகரில் கிறீஸ்தவ தேவாலயம், ஆண்கள் அனாதைவிடுதி எட்டாம் வாய்க்காலில் கிறீஸ்தவ தேவாலயம், கன்னியர் மடம், பற்றிமா பாடசாலை, உருத்திரபுரத்தில் கிறீஸ்தவ ஆண்கள் மடம், பயிற்சி நிலையம் என்பனவுமாகப் பல அமைத்தனர். இவைகள் செழித்து வளர ச்சைவ மக்களும் மதம் மாறிக் கிறீஸ்தவ மதத்தைத் தழுவினர்.

கரைச்சிச் சைவவித்தியா விருத்திச் சங்கம் இப்போதுதான் கண்விழித்து, அப்பூஜீயைக் கௌரவ நிர்வாகியாகக் கொண்ட ஆதாரக்கல்விக் குருகுலம் ஒன்றை அமைத்துக்கொண்டது. 24-2-64-ம் ஆண்டு ஓலைக்குடிசையில் பதினொரு அனாதைச் சிறுவர்களுடன், பெரியோரின் ஆதரவில், சுவாமிகளின் ஆசியுடன் நிதியை நீட்டி நீதியாக்கி இக்குருகுலதாபனம் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவருளும், திருவருளும் கொண்டு குருகுல தாபனம் நீதி, உண்மை, அறிவு முதலிய பண்புடன் வளரத் தொடங்கியது. கிளிநொச்சி பரந்த பிரதேச மாகையால் மகாதேவ ஆச்சிரமப் பீடாதிபதி தவத்திரு வடிவேற் சுவாமிகள், அப்புஜீ அவர்கள், பல சைவப் பெரியார்கள் அருளாளர்கள் ஆகியோரின் இடைவிடாத தவத்தாலும் முயற்சியாலும் சைவ ஆலயங்களைத் தாபித்தனர். திருநெறிக் கழகங்களையும் தாபித்தனர். நித்திய நைமித்திய பூசைகள் விழாக்கள் முதலியவற்றின் மூலம் ஆங்காங்குள்ள சைவசமயத்தைப் பேணிப் பாதுகாத்தனர். கிளிநொச்சி நகரில் இன்று வானளாவும் மண்டபங்களுடன் காணப்படும் முருகன் ஆலயத்தை ஆரம்பித்து வைத்தவர்களுடன் அப்புஜீ முதன்மையாக நின்றார்.

கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயம் இன்று இரண்டாயிரம் மாணவர்களும், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும், கொத்தணி அதிபரும், வானளாவும் கட்டிடங்கள் விஞ்ஞான கூடங்கள், நூல்நிலையம், பிரார்த்தனைக் கூடம் மாதிரிப் பாலர் கல்விகற்பிக்கும் கூடம் விளையாட்டு மைதானம், தென்னம் கமுகஞ் சோலைகள் மாமரச் சோலைகள், வயல்வெளி முதலியன காணப்படுவதற்கு, அன்று அப்புஜீ அவர்கள் இவ்வித்தியாலயம் வளர்வதற்கு இட்ட அத்திவாரமும் எடுத்த முயற்சியுமே மூலகாரண மென்றால் மிகையில்லை.

அப்புஜீயின் இருகண்களில் ஒருகண் இந்துமகாவித்தியாலயம்மற்றக்கண் ஆதாரக் கல்விக் குருகுலம். பேச்சு இந்துமகா வித்தியாலயம் மூச்சு குருகுலம். உடல் இந்துமகாவித்தியாலயம் உயிர் குருகுலம. இவ்வாறு இரண்டு தாபனங்களையும் ஒன்றுக் கொன்று வேறுபாடின்றி மிகவும் சிரமப்பட்டு வளர்த்தார். குருகுலக் காட்டை அழித்துக் கழனியாக்கும் வரை நெல்லரிசிச் சோறு, நெல்லரிசிமாவிற் செய்த உப உணவு வகைகள் உண்பதில்லை யென்று விரதம் அனுட்டித்தார். இதனால் வரகரிசிச்சோறு குரக்கன் மா, பயறு, சோழம், உழுந்து போன்ற சிறுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னியங்களிற் செய்த உணவு வகைகளைச் சாப்பிட்டார். தேநீர், கோப்பி குடிக்காது மல்லித் தண்ணீர் குடித்தார் மகாத்மா காந்திஜியின் விரதத்திற்கு அன்னை கஸ்தூரிபா தொண்டு புரிந்தது போல அப்புஜீயின் விரதங்கட்கும் அம்மா பெருந் தொண்டாற்றியது குறிப்பிடத்தக்கது.

அப்புஜீயின் விரதம் நீடிக்கப் பொதுமக்கள், அரசாங்க ஊழியர்கள், சைவப் பெரியார்கள், தொண்டர்கள், குருகுல அபிமானிகள் விடவில்லை. மிக விரைவிலே காடு வெட்டிக் கழனி யாக்கினர். பின்னர் அவ்வயலை உழுது நெல் விளைவித்த பின்னரே அப்புஜீ அவர்கள் நெல்லரிசி உணவை உண்டார் என்றால் அவர்களின் மனஓர்மத்தை விபரிக்கச் சொற்களும் உண்டோ.

அப்புஜீ ஐம்பத்தைந்து வயதைத் தாண்டியதும் பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றார். குருகுல தாபனம் வளர்வதற்காகத் தன் முழுநேரப் பணிகளையும் குருகுலத்திற்கு அர்ப்பணித்தார்.

அரசாங்கத்தின் வருமானம் இன்றி; ஏழைப்பிள்ளைகளையும், பெற்றோர் அற்ற குழந்தைகளையும், மற்றும் ஆதரவற்ற முதியோரையும் முறையாகப் பேணுவதற்காக வயலையும், தோட்டத்தையும் நம்பி இருந்தார். ஆனால் வயல் தோட்டம் இரண்டும் குருகுல மக்களின் உணவின் ஒரு பகுதியை மட்டுமே அளித்தது. மிகுதியான தோட்ட வருமானம் வயல் வருமானம் இருந்தால் அவற்றைப் பணமாக்கிப் பிற தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

குருகுல வளர்ச்சிக்குத் தோளோடு தோளாக ஈடு கொடுத்தவர்களில் சிவநெறிப் புரவலர் மில்க் வைற் முதலாளி திரு க. கனகராசா என்பவரும் ஒருவராவர். குருகுலம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம், புறத் தூய்மைக்காகச் சவர்க்காரம் நீம் முதலாகக் கொடுத்து உதவினார்கள். குருகுலக் குழந்தைகள், வளர்ந்தோர்

முதியோர் ஆகியோரின் அகத் தூய்மைக்காகப் பிரார்த்தனைப் பாடல்கள், பொன்மொழிகள் ஆத்மீக சம்பந்தமான பிரசுரங்களை இலவசமாக அளித்து வருகின்றனர்.

கற்பகதரு விதைகளைக் குருகுலத்தில் கொடை வள்ளல் திரு. கனகராசா நாட்டச் செய்தார். அது இன்று விருட்சமாகிப் பழம் தருகின்ற நிலையைக் காண முடிகின்றது. இவ்வாறு சிவநெறிப் புரவலர் அவர்களின் பணி இலங்கையின் மூலை முடுக்குகளிலும் காணமுடிகின்றது. கடல் கடந்து பாரத நாட்டின் எல்லையாகிய காசிவரையும் இவ்வறப்பணி சென்றுள்ளது. மலேசியா சிங்கப்பூர் இவ்வாறு தமிழர் வாழும் இடங்களெல்லாம் அன்னாரின் அறப்பணி பருந்தின் நிழல் போற் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அப்புஜீ தனது இடைவிடாத முயற்சியால் குருகுலப் பயிரைப் பேணி வந்தார். உடல் பொருளாவி முழுதையும் குருகுலத்திற்கே அர்ப்பணித்தமையால் சிக்கன வாழ்வை நாடினார். இதனால் தாடி வளர்த்தார். சலவைத் தொழிலாளியை நாடாதிருந்தார். தனக்கென்று அறை வசதிகளை நீக்கினார். ஓர் ஏழை விவசாயி போன்றே வாழ்ந்தார். குருகுலக் கட்டிடங்கள் அப்புஜீயின் உடலாகும். அங்கு வளரும் குழந்தைகள் அப்புஜீயின் உயிர் மற்வைகள் நாடி, நரம்பு, எலும்பு இருதயம் என்று அடிக்கடி கூறுவார்.

குருகுலம் என்பது குருவும் சிஷ்யர்களும் கூடி வாழும் புனிதமான வாழ்வாகும். இக் குரு பரம்பரை கையிலாய மலையிற் கல்லால மரத்தின் கீழ் ஆரம்பிக்கப் பட்டு எங்கும் பரவியது. ஆதியில் பரமசிவனால் ஆரம்பிக்கப் பட்ட குருகுலம், வேதகாலம், ஆகமகாலம், இதிகாசகாலம், புராணகாலம் என்ற எல்லாக் காலங்களிலும் ஆங்காங்கு காணப்பட்டுள்ளது. அக்காலக் கல்வி முறை குருகுல வாழ்வு மூலமாகவே வளர்ந்தது. சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தங்களை யாத்த சந்தானுசாரியார்கள் கூடக் குருகுல வாழ்க்கையில் இருந்து சமயம் கற்றதாக வே அறிகிறோம்.

அந்தணர், அரசர், வணிகர் போன்றோர் மட்டுமே அக்காலத்திற் குருகுலக் கல்வி பயில முடிந்தது. மறந்தும் மற்ற வர்ணத்தவர்கள் குருகுலக் கல்வி பயில முடியாத நிலையை ஏகலைவன் கதையில் இருந்து அறிய முடிகின்றது. தனிப்பட்ட ஒருசிலருக்கு இருநத குருகுலக் கல்வி முறையை மகாத்மா காந்திஜீ அவர்கள் எல்லா இன மக்களும் குருகுலக் கல்வியை கற்கலாம் என்ற நிலைக்குக் கொண்டுவந்தார். குருகுலக் கல்வி கற்க வரும் மாண வர்கட்கு இலவச உணவு, உடை, உறையுள் போன்ற வசதிகள் அளித்தார். இதனால் இன்று இந்தியாவில் ஏறக்குறைய எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட குருகுலக் கல்வி நிலையங்களைக் காணமுடிகின்றது.

கிழக்கிலங்கையில் சுவாமி விபுலானந்தர் குருகுலம் தாபித்தார். பொன்விழாவும் கண்ட இக்குருகுலத்தில் அனாதை ஆண்கள் மட்டுமே காணப்படுகின்றார்கள். இக் குருகுலத்திற்குச் ஸ்ரீ இராமக் கிருஷ்ண மடத்துச் சுவா மிகளின் பரம்பரையினரே தர்ம கர்த்தாக்களாக இருப் பதால் இங்கு வதியும் மாணவர்கள் சமய ஆசார வழி பாட்டிலும், கல்வி, கேள்வி முதலியவற்றிலும், பழக்க வழக்க ஒழுக்கங்களிலும் மிகுந்து ஒழுக்க சீலர்களாகச் சமூகத்திற்குப் பயன்படுகின்றனர். இக் குருகுலம் இன்று வரை சிறந்தோங்க ஸ்ரீ இராமக் கிருஷ்ண மடாலயங்க ளுடன் மட்டுநகர் வாழ் பொதுமக்கள், பழைய மாணவர், அரச ஊழியர் போன்றோர் உடல் உழைப்பும், பொருளு தவியும் செய்து வருகின்றனர்.

வடமாகாணத்தில் மாதோட்டத்திலுள்ள திருக்கே தீஸ்வரத்திலும் சிவானந்த குருகுலம் ஒருகாலத்தில் இருந்தது. இதனைச் சிவமணி கந்தையா வைத்தியநாதன் தாபித்தார். இக் குருகுலத்தில் இலங்கையின் பலபாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் உள்ள சைவ ஆலயங்களில் இருந்து அந்தண மாணவர்கள், சைவக்குருக்கள் மாணவர்கள் வேதங்கள் ஓதும் பயிற்சியும் ஆகமப் பயிற்சியும் பெற்றனர். அருகில் உள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வேதாகம முறைப்படி பூசை செய்யும் பயிற்சி செயல் முறையிற் பயின்றனர். இப்போது அது மறைந்தாலும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா அம்பாள் ஆலயத்தில் தொடர்ந்து வேதாகமப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

காரைநகரிலும் காந்தியக் கல்வி அடிப்படையில் வார்தாக் கல்விக் குருகுலம் திரு. பொ. நவரத்தினம் (M. A. DIP) என்பவரால் 1956ம் ஆண்டு தாபிக்கப் பட்டுச் சில வருடத்தின் பின் அதுவும் மறைந்துவிட்டது. அவை போலாய் விடாது வடமாகாணத்தில் கரைச்சிச் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதாரக் குருகுலம் சர்வதேசக் குருகுலமாக வேண்டுமென்று அப்புஜீ கற்பனை செய்து ஆக்க வேலைகளை இராட்சத வேகத்தில் விரிவு படுத்தத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

"தெய்வத்தா லாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்"

(திருக்குறள்)

ஆரம்பத்தில் குருகுலத்தில் ஆண்களும் பெண்களும் ஒரே விடுதியில் இருந்தார்கள். காலப்போக்கில் ஆண்கள் விடுதி வேறாகவும், பெண்கள் விடுதி வேறாகவும் ஆக்கப் பட்டது. ஆண்கள் விடுதிக்கு அப்புஜீ பொறுப்பாகவும் பெண்கள் விடுதிக்கு அம்மா பொறுப்பாகவும் இருந்தார்கள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணம் ரூபா மூவாயிரத்தைக் கொண்டு ஒரு கிணறு வெட்டப்பட்டது. அக் கிணற்றைச் சூழவுள்ள தோட்ட நிலத்தைப் பண் படுத்தி மிளகாய், கத்தரி போன்ற பயிர்களைச் செய் தார். மிளகாய் அதிகமான வருமானம் தந்தது. இதன் உதவியால் முதன் முதலாகப் பிரார்த்தனைக் கூடம் உருவாகியது. இவ்வாறு உணவு மண்டபமும், பெண்கள் விடுதி, நெசவுசாலை ஆதியன படிப்படியாகக் கட்டப் பட்டன.

குருகுலம் ஓலைக் குடிசையாக இருந்த காலத்தில் ஒரு சுவையான சம்பவம் நடந்தது. அச்சம் பவம் குருகுல வளர்ச்சிக்குக் கைகொடுத்து உதவியது. குடிசையின் முற்றத்தில் ஒரு பாவற்கொடி முளைத்தது. அது கொடிவிட்டது. அக்கொடி தாவிப்ப டரக் கொழுகொம்பில்லாது தவித்தது. நிலத்திலே அதன் கொடி கொழுந்து விட்டுப் படர்ந்தது. பஞ்சமி வண்டுகள் அதன் இலைகளை முற்றாக அரித்து விட்டன. இதனால் அச்செடி கொடியுடன் தேடுவாரற்றுக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செயலாக மழைபெய்தது. இவ்வாறு சிலதினங்கள் பெய்தன. இதனுல் அப்பாவற் கொடி மீண்டும் துளிர்த்துக் கண்ணைக் கவரும் பசுமையுடன் காணப் பட்டது. அம்மா இப்பாவலின் செழிப்பைக் கண்டார். உடன் நின்ற குருகுல மாணவர்களைக் கொண்டே அப் பாவலின் அடிநிலத்தைக் கிளறிப் பண்படுத்தினர். பசளையிட்டார். பாவற்கொடி தாவிப் படரப் பந்தலும் போட்டார். சிலநாட்களின் பின்னர் அப்பாவல் ஏராள மான பிஞ்சுகள் பிடித்தன. அவைகள் முற்றியபின், அம்மா அவர்கள் சுவையானகறி சமைத்தார். எல் லோருப்கூடி உண்டார்கள்.

இதன் பின்னர் அப்புஜீ அவர்கள் மாணவர்களைப் பார்த்து மேலே கூறப்பட்ட சம்பவங்களைக் கூறினர். இப் பாவற்கொடிக்கு ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட இடர் பாடுகள் போல இக் குருகுலத்திற்கும் பற்பல விதமான இடர்பாடுகள் ஏற்படலாம். சில காலத்தின் பின் பாவற் கொடியைச் செழிக்க வைக்க வந்த மழையைப் போலப் பிறநாட்டாரின் உதவிகள் கிடைக்கலாம். குருகுலம் அதன் பின்னர் பலரும் போற்றக்கூடிய வகையில் படர்ந்து வளரும். எல்லோருக்கும் ஆறுதலும் உதவியும் அளிக்கும், எனவே நான் தொடர்ந்து குருகுலம் நடத்த வேண்டுமாயின் அம்மாவின் ஒத்துழைப்பு வேண்டும். அம்மா மறுப்பதாக இருந்தால் இப்போதே இக்குருகுலத் தைக் கலைத்து நானும் விலகி விடுவேன் என்ருர். அம்மா அவர்கள் தனது மௌனத்தின் மூலம் சம்மதத்தை அறிவித்தார்.

அக்காலத்தில் குருகுலத்திற்கு அடிக்கடி பல இடர் பாடுகள் வருவதுண்டு. திருடர் குருகுலப் பொருட்களை அபகரிப்பார்கள். சிலர் குறை கூறுவார்கள். அயலில் உள்ள ஆடுமாடுகள் பயிர்களை அழித்தன. சூறவளிக் காற்ருற் குருகுலக் கட்டிடங்கள் சேதமடைந்தன. மழை யின்மையால் வயல் விளைச்சல் குறைந்தது. நட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. அதிக மழை வெள்ளத்தால் விளைந்த நெல்லும் மடிநெல்லாகியது. இக் கலவரத்தாற் குருகுலக் கூரைகள் சிதைந்தன. பிற பொருட்களும் சேதமடைந்தது. பட்டியில் நின்ற மாடுகளை லொறியில் ஏற்றித் திருடினர்கள்.

இடுக்கண் வருங்கால் நகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்

அடுக்கி வரினும் அழிவிலா னுற்ற
விடுக்கண் இடுக்கட் படும்

(திருக்குறள்)

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப அப்புஜீ அவர்கள் குருகுலத்திற்கும், தமக்கும் ஏற்பட்ட இடர்பாடுகளைத் தம் திட்ப நுட்ப அறிவின் தெளிவால் மறந்து "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற வள்ளுவர் இலக்கணத்தின் படி ஒழுகி வருவார்.

பிறருக்கு ஏற்படுகின்ற இடுக்கன் தமக்கு ஏற்படுவது போலத் துடிதுடிப்பார்.

" இடுக்கண்கள் பலப்பல எய்தியக் காலும்
நடுக்கப்பட் டார்நல் லடியார் ஆதலின்
அடைக்கல மாகவுன் திருவடி யடைந்தேன்
விடைக்கு கந்தவனே இலங்கைநல் வேந்தே

( நற்சிந்தனை )

காலங்கள் சக்கரம்போலச் சுற்றிக்கொண்டே இருந்தது. குருகுலத்தில் மாணவர்களும் நூற்றுக்குமேல் சேர்ந்தனர். குருகுல நிர்வாகம் எளிதாக இருப்பதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் தாம் மாணவனுக இருந்தகாலத்தில் அங்குள்ள விடுதி நிர்வாக முறைகளைக் கடைப்பிடித்தார்.

குருகுல மாணவர்களை உணவுக்குழு, சுகாதாரக் குழு, விவசாயக்குழு, பொதுக்குழு என்று வகுத்தார்' அவ்வக் குழுக்களுக்கு அவ்வக் குழுக்களிலுள்ள வயதால், வகுப்பால், அறிவால் மிகுந்தவர்களைத் தலைவராக்கினுர். ஒவ்வொரு குழுவும் பொறுப்புணர்ந்து தத்தம் கடமைகளைச் செவ்வனே திறம்படச் செய்தது. வாரம் ஒரு முறை இக்குழுக்கள் மாறும். இதனுல் மாணவர்களுக்கோ, நிர்வாகிகளுக்கோ சலிப்பு ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

" வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதர் எல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும் "

(பாரதி பாடல்)

குருகுலம் தாபிக்கப்பட்ட நோக்கம் பாமரமக்களின் ஏழைக்குழந்தைகளை உணவூட்டி வளர்ப்பது மட்டுமல்ல, அவர்கட்குக் கல்வி, கலை, கலாச்சாரம், சமய அனுட்டானம், மதபோதனை என்பவற்றைப் பயிற்றி நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கவேண்டும். இந்த நோக்கம் திருநெறிக்கழகம், சைவவித்தியா விருத்திச் சங்கம் என்பனவற்றின் சைவப் பெரியார்களின் உள்ளத்தில் ஊறி இரத்தத்துடன் கலந்து செயற்பட்டு வந்ததாகும்.

"பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பது அனுபவ வாயிலாகக் கண்ட முதுமொழி. அந்தப்பத்தும் மறந்துவிட்டால் மனித சமுதாயம் மிருக சமுதாயமாக மாறிவிடுமல்லவா? கல்வி, கருணை, தர்மம், சேவை, தியாகம், அன்பு போன்ற பண்புகள் பெருகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயசக்திகள் மனித சமுதாயத்தைவிட்டு விலகத் தெய் வீக சமுதாயமாகி விடுமல்லவா, எனவேதான் குருகுல மாணவர்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத் தினர்.

அப்புஜீ திருநெல்வேலி சைவச் சிறுவர் அனாதை விடுதியில் இருந்தகாலத்தில், குறிப்பிட்ட காலம் அல் லது வயதுவரையும் அவ்விடம் தங்கலாம், குறிப்பிட்ட வயதைக் கடந்துவிட்டால் ஆணென்ருலும், பெண் ணென்ருலும் விலகிவிடவேண்டுமென்ற விதி இருந்தது. ஆண்கள் எப்படியும் வாழ்ந்து விடலாம். அவர்களைச் சமுதாயம் ஆறைறகூறுவது மிகமிகக் குறைவு, பெண்களை மக்கள் இலகுவில் குறைகாண்பார்கள். அதனால் அனா தைப் பெண்களின் வாழ்வு? நினைத்தாலே நெஞ்சு துடிக்கும். இப்போது அப்படி விலக்கும் விதி தளர்த் தப்பட்டுவிட்டது.

அப்புஜீ அவர்கள், மாணவர்கள் விரும்பும் காலம் வரையும் குருகுலத்தில் இருக்கலாம் என்ற வசதிகளைச் செய்து கொடுத்தார். குருகுலம் ஓர் பல்கலைக் கழகம் போன்று இருக்கவேண்டுமென விழைந்தார். தனது விருப்பத்தைச் சைவவித்தியா விருத்திச் சங்க ஆதாரக் குருகுல அங்கத்தவர்கட்கும், அபிமானிகட்கும் சந்தர்ப் பம் கிடைக்கும்போதெல்லாம் பிரலாபிப்பார். சைவம் கமழ, முத்தமிழும் குருகுலத்தில் வளரவேண்டுமென ஏங்குவார். குருகுல மாணவரிடையே இசைப்பயிற்சித் திறமை இருக்கவேண்டும் என்ற ஆர்வத்தால் தன்செல வில் சங்கீத வித்துவான்கள் மூலம் இசைபயிற்றுவித் தார். குருகுலச்செலவில் இராமநாதன் கல்லூரியிலும் மாணவிகளை அனுப்பிச்சங்கீத இரத்தினம் அல்லது டிப் பிலோமா செய்வித்தார்.

சைவசமய அனுட்டானம் ஆசாரங்கள் மாணவப் பருவத்திலேயே நடைமுறையில் இருக்கவேண்டும். " ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா"? "தொட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் முதுமொழி கஃள அனுசரித்து, மாணவர்கள் அதிகாலே ஐந்து மணிக்கே எழுந்து நித்தியகரும விதிகளை முடித்தல்வேண்டும். நித்தியகரும விதியில் மலசலம் கழித்தல், பல்லுத்துலக்குதல் முதற் குளித்தல், அனுட்டானம் பார்த்தல், பிரார்த்தனை செய்தல் என்பன அடங்கும். இதன்பின்னர் குருகுலப்பணிகள் செய்தல்வேண்டும். காலே எட்டு மணிக்குக் காலே உணவை முடித்துப் பாடசாலேச் சீருடையுடன் பாடசாலே மாணவிகள் செல்லும் அழகு வெள்ளே வெளேரென்ற அன்னப்பறவைகள் வரிசையாகச் செல்வதுபோன்று காணப்படும்.

பாடசாலேவிடும் நேரத்திற் திரும்பிய குருகுல மாணவர்கள் குருகுலம் வரும்போதே கால்களேக் கழுவிக் குருகுல மண்டபத்தினுட் செல்லவேண்டும். சீருடைகளைக்களைந்து, குருகுலத்தின் சீருடைகளே அணிந்து கால், கை, முகம் கழுவித் திருநீறணிந்து, பிரார்த்தனே செய்து மதிய உணவை உண்பார்கள். அதிகாலே நான்கு மணிதொடக்கம் காலே ஆறுமணிவரை பிரம்ம முகூர்த்தகாலம். இந்தநேரம் படித்தல், தியானம்செய்தல் மனதிற்கு சாந்தமும், ஞாபகசக்தியும் தருவதுபோல உணர்வையும் ஆண்டவன் பிரார்த்தனேயோடு உண்பதால் நல்ல சிந்தனேகளே வளர்க்கும் என்பதால் குருகுல மாணவர்கள் உணவருந்தமுன் பிரார்த்தனே செய்யும் பழக்கத்தை அப்புஜீ நடைமுறைப் படுத்தினர்.

மாலே நேரத்திலும் மாணவர்கள் ஒருமணித்தியாலயம் குருகுலப் பணிசெய்தல் வேண்டும். பெண்கள் சமயற்பகுதியிற் பணிசெய்வார்கள். ஆண்கள் தோட்டத்தில் வேலேசெய்வார்கள். வயலே உழுதல், கிருமிநாசினி அடித்தல், வரம்பு கட்டுதல், செதுக்குதல், வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல், அருவி வெட்டுதல் போன்ற கடுமையான வேலேகளேக் குருகுலக் கணக்கில் கூலியாட்கள் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் கல்விநிலை மேம்படுவதற்காகக் கலைவிழா, நவராத்திரிவிழா, நீதிவிசாரக் கருத்தரங்கு, சந்தேகந்தெளிதல் போன்றனவும், ஆட்சிமன்றும் வார இறுதியில் நடைபெறுதல் உண்டு. நீதிவிசாரக் கருத்தரங்கு அதி அற்புதமானது. இதனை விபரிக்கவேண்டுமாயின் இக்கட்டுரை நீண்டுகொண்டே இருக்கும். இக்கருத்தரங்கில் " குருகுலம் " என்ற பத்திரிகையும் வாசித்தலுண்டு. இவைகள் யாவும் மாணவர்களின் ஆக்கங்களாகவே காணப்படும்.

குருகுல நிர்வாக அமைப்பு, தற்கால அரசியல் அமைப்பை ஒத்திருந்தது. ஆனால் அரசியலில் இருக்கும் மந்திரிமார்களுக்கு வேதனம்உண்டு. குருகுல நிர்வாக அமைப்பில் இருக்கும் மாணவ மந்திரிகளுக்கு எவ்வித வேதனமும் இல்லை. வேதனமற்ற சேவையில் அவர்களின் தியாக புத்தியின் பிரதிபலிப்பையும், பரிமளிப்பையும் மிகுதியாகக் காணலாம்.

ஜனாதிபதி, சபாநாயகர், பிரதமமந்திரி, உணவு மந்திரி, சுகாதாரமந்திரி, விவசாயமந்திரி, கலைமந்திரி போன்ற பதவிகள் மாணவர்களே மாணவர்களைத் தெரிவார்கள். இவர்கள் தத்தம் பகுதி நிர்வாகத்தை எவ்வித ஊழலோ, குறைபாடுகளோ இன்றி நடத்துவார்கள். ஏதும் திருத்தம் செய்யின் ஜனாதிபதிக்குச் சொல்ல வேண்டும். அவர் அத்துறை மந்திரிகட்குக் கூறித் திருத்தச் செய்வார்.

அடிக்கடி ஆட்சிமன்றம்கூடி மந்திரிகள் ஆலோசிப்பார்கள். இவர்களின் ஆலோசனைக்குப் பெரியவர்களும் புத்திமதி கூறுவார்கள். வாக்குவாதம் செய்வார்கள். பின்னர் தெளிவு அடைவார்கள். நற்கருமங்களைச் செய்வதற்கு ஒவ்வொரு குருகுல மாணவர்களும் முன்னிற்பது ஆனந்தமான காட்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு பொறுப்புணர்ச்சியுடன் பயின்ற குருகுல மாணவர்களிற்பலர் இன்றும் பலதுறைகளிலும் பணிபுரிகின்ருர்கள். வெளிநாடுகளிலும் பெரிய பெரிய பதவிகளை வகிக்கின்ருர்கள். விவசாயம், வணிகம் செய்பவர்கள்கூடக் கண்ணியமாகவும், கௌரவமாகவும் காணப்படுகின்ருர்கள். சுருங்கக் கூறுமிடத்துக் குருகுலம் ஆரம்பக் கல்விமுதற் பல்கலைக்கழகக் கல்விவரை மாணவர்கள் கல்விபயிலும் பண்பை அளித்தமையால் அப்புனிதரின் செயற்பாடுகளை இன்றும் கிளிநொச்சி மாவட்டம் மறவாது இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

''சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவத்தொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்''
(சிவயோக சுவாமிகள்)

சிவதொண்டின் பெருமை, குருவின் அருமை ஆகியவற்றைக் குருகுல மாணவர்கள் மாணவப் பருவத்தில் கடைப்பிடித் தொழுக வேண்டும், இதற்கான செயல்முறை வழிகளைச் சாதனைப் படுத்த அயலில் உள்ள மகாதேவ ஆச்சிரமத்தில் தானே குருவின் பணிகளைச் செய்வார். ஆச்சிரமப் பணிகளைச் செய்வார் தொடர்ந்து குருகுல மாணவர்களும் ஆச்சிரமப் பணி விடைகளிற் பங்கு கொள்வார்கள். ஆச்சிரமமும், குருகுலமும், இந்துமகா வித்தியாலயமும் ஒன்றற் கொன்று பிரிப்பின்றி என்றும் இணைந்திருக்க வேண்டுமாயின் சிவதொண்டு பாலமாக அமைய வேண்டும் என்பதை அடிக்கடி அப்புஜீ மக்கட்குக் கூறுவார்.

ஆண்டு தோறும் திருநெறிக் கழகம் குருகுல மாணவர்க்கும், இந்துமகா வித்தியாலய மாணவர்க்கும், கிளிநொச்சியில் வாழும் மக்கட்கும் சமயதீட்சை, சுவாமிஜீ அவர்களின் தலைமையின் கீழ் ஆச்சிரமத்தில் நடத்துவது போல; இரத்தினபுரம், வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய இடங்களிலும் அப்புஜீயின் தலைமையின் கீழ் தலைவர் திரு. ப. கணேசபிள்ளை அவர்களின் உதவியுடன் சைவசமய மாணவர்க்கும், முதியோர்க்கும் சமயதீட்சை நிகழ்த்துவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமயதிட்சை ஏழுவயது, ஒன்பது வயது பதினொரு வயதுக் காலத்துக்குள் பெற்றுவிட வேண்டும் "திட்சை" என்பது அறியாமை இருளை அகற்றி, ஞான அறிவைக் கொடுப்பதாகும். சமயதீட்சை பெறுதவன் சைவசமயி அல்லன். சைவசமய மக்கள் ஏழுவகைத்தீட்சை பெற வேண்டும். மற்றெல்லாத் தீட்சை பெறத் தவறினும் சமயதிட்சை பெற்றேயாக வேண்டும். கிறீஸ்தவ மதத்தினர் தம் குழந்தை பிறந்த நாற்பது நாட்களுக்குள் ஞானஸ் னானம் பெறச் செய்வர். ஞானஸ் னானம் பெறுதவனை உண்மைக் கிறீஸ்தவனுகக் கணிப்பதில்லை: எனவே சைவ சமயத்தவர்கள் பிரவேச திட்சையாகிய சமய திட்சையைப் பெறவேண்டுமெனத் தன் மணிக் குரலால் கேட்போரை ஈர்க்கும்படி தெளிவாகப் பிர சங்கம் செய்வார். சமய திட்சை பெற்றவர்கள் முறையாக அனுட்டானம் பார்ப்பதற்கு மில்லைவற் வெளியீடாகிய நித்திய கரும விதியும், தோத்திர நூல்களும் அளிக்கப் படும்.

குருகுல தாபனத்தைச் சூழப் பல சைவ ஆல யங்கள், கிறீஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள், வித்தி யாசாலைகள், பொது நிறுவனங்கள் உண்டு. பொதுமக் களையும் குருகுலத்தையும் இணைக்கும் பாலமாகச் சிரம தானம், பொதுமக்களுடன் இணைந்து அவ்வாலயங்கள், பொதுநிறுவனங்கட்குச் செய்ய முற்பட்டனர்.

எல்லாத் தானங்களையும் தருவது சிரமதானம். சிரமதானத்தை ஒவ்வொருவரும் சிரமத்துடனும் பொறுப் புடனும் ஆற்றி விட்டால் மற்றத் தானங்கள் வளர்வது அருமையாகும். எனவே அப்புஜீ அவர்கள் குருகுல மாணவர்களை; திருஞான சம்பந்த சுவாமிகள் குழு, திரு நாவுக்கரசு சுவாமிகள் குழு, சுந்தர மூர்த்தி சுவாமிகள் குழு, மாணிக்க வாசகர் சுவாமிகள் குழு என வகுத்து, ஒவ்வொரு குழுவிற்கும் குருகுலத்திலுள் ளபெரியவர்களைத் தலைவராக்கி விடுவார். திருநாவுக்கரசு சுவாமிகளின் மறுபெயர் அப்பர், அடிகள். எனவே அப்புஜீ அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் அடிகளின் குழுவிற்குத் தலைமை வகிப்பார். அடியேன் திருவாசகத்தில் அதிகம் நாட்டமுள்ளமையால் மாணிக்க வாசக சுவாமிகளின் குழுவிற்குத் தலைமை வகித்தேன்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில், திருவலகு (கூட்டுமாறு) மண்வெட்டி, குப்பைவிருண்டி கத்தி, தேனீர் ஆயத்தம் செய்யும் பாத்திரங்கள் சகிதம் மாணவர்கள், தலைவர்கள் அம்மா அப்புஜீ பொதுமக்களிற் சிலர் டிறக்டர் பெட்டியில் பவனியாக ஆலயம் செல்வார். ஆலயத்தின் நான்கு வீதிகளில் ஒவ்வொரு வீதியை ஒவ்வொரு குழு பொறுப்பேற்றுச் சுத்தம் செய்வார்கள். இடையிலே தேனீர் குடிப்பார்கள் அப்புஜீக்கு மல்லித் தண்ணீர் கொடுக்கப்படும், சுத்தம் செய்து முடிந்தபின் எல்லோரும் கால், கை, முகம் கழுவி ஆலய வழிபாடு, பிரார்த்தனை முதலியவற்றில் பங்கு கொள்வார்கள். ஒரேநாளில் ஆலயம் சுத்தம் செய்யப் படாதிருந்தால் தொடர்ந்து மறுவெள்ளி சுத்தம் செய்வார்கள். இதேபோலக் குருகுலச் சுத்தம் ஞாயிற்றுக் கிழமைகளில் சிரமதான மூலம் செய்வதைக் காணலாம்.

ஆலயங்களிலும் பொது நிலையங்களிலும் விஷேட தினங்கள், திருவிழாக்கள் நிகழ விருந்தால் அங்கு குருகுல மாணவர்களைக் காணலாம். அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களில் இசை, பண்ணிசை முதலியவற்றில் மக்கள் பின்தங்கி இருந்தமையால் குருகுல மாணவர்களே பண்ணிசை, பஜனை பிரார்த்தனை செய்யப் போவார்கள். இன்றும் குருகுல மாணவர்கள் பிரார்த்தனை முதலியவற்றில் பங்கு கொள்வதைக் காண முடிகின்றது. இவர்களின் பண்ணிசை, பஜனை விழாக்களில் அன்றி மரணவீடுகட்கும் பாடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்; சமயம் வேறு வர்ழ்வு வேறு என வாழ்ந்து வரும் பழக்கம் அதிகரிப்பால், கலாச்சாரம் பண்பு, ஆகிய நற்குணங்களும் மெல்ல மெல்ல அருகத் தொடங்கியது. அன்னிய நாட்டுப் பண்பும் கலாச்சாரமும் வளரத் தொடங்கிது. இது மக்கள் வாழ்விற்குப் பெரும் இடர்பாடுகளைத் தரத் தொடங்கியது. எனவே பாதயாத்திரைப் பஜனை வீட்டுக்குடும்ப வழிபாடு முதலிய வற்றை ஆத்மஜோதி ஆசிரியரின் உதவியுடன் ஆரம்பித்தார். திருவெம்பாக் காலங்களில் கொட்டும் மழையிலும் பனியிலும் மாணவர்கள், அயலில் வதியும் ஆசிரியர்கள், பொதுசனங்கள் குருகுலத்திலிருந்து அயலிலுள்ள ஆலயங்கட்குத் திருப்பள்ளி யெழுச்சி திருவெம்பாவை, சிவபுராணம் பாடிக்கொண்டு பாதயாத்திரையாகச் செல்வார்கள். கிளிநொச்சி முருகன் ஆலயத் தேரிற்கும் பாதயாத்திரைப் பஜனையுடன் செல்வார்கள். ஜெயந்தி நகரில் உள்ள வீடுகளில் குடும்பப் பிரார்த்தனைகளை ஆத்மஜோதி ஆசிரியரைக் கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்கள் வேலை செய்யும் போது விஞ்ஞன வார்த்தைகளைக் கொட்டிப் பிரச்சனைகளை உருவாக்காது இருக்கவும் சலிக்காமலும் உற்சாகத்துடன் இருப்பதற்காக, ஒருவர் ஒரு பாட்டைப் பாடிமுடிக்க அப்பாட்டு முடிந்த எழுத்திலிருந்து மற்ற மாணவர் பாடவேண்டும் என்ற நியதியை ஆரம்பித்ததனால் மணவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டுவதற்காகப் பல நூல்களின் செய்யுட்களை மனனம் செய்யும் தன்மைகளையும் உருவாக்கினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடக்கின்ற எப்போட்டியிலும் குருகுல மாணவர்கள் கலந்து முதற் பரிசு எடுப்பார்கள். அப்புஜீ இந்துமகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் குருகுல நிர்வாகம் போன்று பாடசாலை நிர்வாகமும் இருந்தது. பாடசாலை மாணவர்களும் அன்று தொடக்கம் இன்றுவரையும் போட்டியிற் கலந்து வெற்யீட்டுவதென்றால் அப்புஜீ இட்ட விதையென்றால் மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

" அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெலாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே"

( பாரதி பாடல் )

1974-ம் ஆண்டு வானம் பொய்த்தது. இதனால் நெல் விளையவில்லை, தோட்ட வருமானமும் குன்றின. இடையில் ஒருநாள் பதினைந்து நிமிடச் சூறுவளிக் காற்றுடன் பேய்மழை பெய்தது. பிரார்த்தனைக் கட்டிடக், கூரையோடு இந்துமகா வித்தியாலயத்தையும் கடந்து அப்பாலே சென்றது. குருகுல ஆண்குழந்தைகள் மயிரிழையில் உயிர்தப்பினர். ஒன்றன்பின் ஒன்றாகப் பேரிடர் பெருகியது. அப்புஜீ எதற்கும் மனம் தளராது கருமத்தில் ஈடுபட்டார்.

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்பதை மாணவர்கள் வாழ்வில் தொடர்பு படுத்த சர்வசக்தி ஆலயத்திற்கு 1972-ம் ஆண்டு பண்டிதமணி, ஆத்மஜோதி ஐயா முதலிய பல சைவப் பெரியார்களின் ஆசியுடன் சர்வசக்தி மேருபீட அத்திவார அடிக்கல் நாட்டினார்கள். 1974-ம் ஆண்டில் பாரத நாட்டின் கண்போன்ற ஆச்சாரிய வினோபாவே அடிகளாரின் சிஷ்யர்கள் பாதயாத்திரையில் ஈழம் வந்தார்கள். இலங்கையின் பலபாகங்களிலும் பாதயாத்திரை செய்தார்கள். இவர்களின் வருகை குருகுலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கும் இருந்தமையால் அவர்களின் கைகளாலும், ஆலய அத்திவாரக்கல் நாட்டப்பட்டது.

வடமாகாண, கிழ்மாகாணத்திலும் சமயத்தையும் மொழியையும் வளர்க்கும் அறநிலையங்கள், ஆதீனங்கள், மடாலயங்கள் பல காணப்படுகின்றன. இவைகளைப் பொருள்படைத்த, ஜீவகாருண்யம் நிறைந்த வள்ளல்கள் ஆரம்பித்து ஏழை மக்கட்கும், ஏழைக் குழந்தைகட்கும் ஆதரவளிப்பார்கள். இவர்களின் பின் நடத்துனர் இன்றி மூடுவிழா எடுக்கும் நிலை ஏற்படாதிருக்க 1976-ம் ஆண்டு அப்புஜீ அவர்கள் அறம்வளர்க்கும் தாபனங்களின் ஒன்றியம் ஒன்றை உருவாக்க விழைந்தார். பல பெரியார்களின் ஆதரவுடன் நாவலர் மண்டபத்தில் இக் கருத்தரங்கை அங்குரார்ப்பணஞ் செய்தார்.

தொடர்ந்து கைதடி சைவச்சிறுவர் நிலையத்திலும், வதிரி பரமானந்த ஆச்சிரமம், குருகுலம், திருகோணமலை சிவானந்த மாதாஜீ ஆச்சிரமம் முதலிய இடங்களில் இக்கருத்தரங்கைத் தொடர்ந்து நடத்தினர். பொதுவாக எல்லா இடங்களில் இருந்தும் முகாமையாளர்கள்; சைவப்பெரியார்கள், அபிமானிகள் வருகைதந்து கலந்துரையாடினர்கள். இவர்களுடன் அப்புஜீ அவர்கள் ஒன்றியம்பற்றிய கடிதப்போக்குகள் வைத்தார். அப்புஜீ இருக்கும்போது அவர்களுடைய ஒன்றியச் சிந்தனைகள் உருவாகவில்லை யெனினும் இன்று சமுதாயம் இதுபற்றிச் சிந்தித்துச் செயற்படுவதென்றால் அஃதே அப்புஜீயின் நீண்டகாலத் தவமாகும்.

1977-ம் ஆண்டு மலைநாடு, கொழும்பு, பொதுவாகத் தமிழர் வாழும் பிரதேசங்களில் இனப்பிரச்சனை நடந்தது. இதனுற் பாதிக்கப்பட்ட தமிழரில் ஒருபகுதி அகதிகளாக இந்து மகாவித்தியாலயத்தில் வந்து சரணடைந்தார்கள். அயற்கிராமத் தொண்டர்கள், உதவி புரியவந்தார்கள். கிராம மக்கள் உணவுக்குரிய பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், பழைய உடைகள் அளித்தார்கள். எனினும் அக திகள் வந்திறங்கிய உடனே அவர்களை ஆதரித்து உணவு, முதலியன குருகுலமூலம் அப்புஜீ அளித்தார்.

கிறீஸ்தவ மதச் சகோதரிகள், போதக குருமார் அகதி மக்களை மதமாற்றம் செய்வதற்காக வேகமாகத் தம் பிரார்த்தனைகளைச் செயற்படுத்தினார்கள், ஆறுதல் மொழி அன்பாகக் கூறினார்கள். மருந்து வகைகள் அளித் தார்கள், இதனை அப்புஜீ அவர்கள் அவதானித்தார். குருகுல மாணவிகளிற் சிலரை அழைத்து அகதிகளையும் சேர்த்துக் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தினார், அடியேனை யும் அகதிகளின் வேதனைகள் மறைய சைவநற்சிந்தனை கூறும்படி பணித்தார். இவ்வாறு தினமும் காலை, மாலை நிகழவே கிறீஸ்தவர்கள் தமது வேகச்செயற்பாடுகளைக் குறைத்துக்கொண்டனர்.

கிறீஸ்தவர்கள் மக்கள் அல்லற்படும் இடங்களிலே கலந்து மக்களின் குறைபாடுகளை நீக்கிவருவதால் மக்கள் மதமாற்றம் செய்துவருகின்றனர். இக்கொள்கை எமது சமயத்திலும் இல்லாமலில்லை. ஆனால் மக்களுடன் மக் களாய்க்கர்ந்து தியாகபுத்தியுடன் சேவைசெய்பவர்கள் குறைவாகக் காணப்படுகின்றது. அல்லற்படும் மக்க ளின் மனநிலை அறிந்து அவர்கட்கு உதவுதல், வறிய மக்கட்கு வாழவழிகாட்டுதல் போன்ற நற்கருமங்களை முழுமனதோடு சேவையாற்றத் தியாகிகள் உருவாக வேண்டும். இச்சிந்தனை அப்புஜீ இளமைக் காலந்தொட்டு அவர்களை வாட்டிவந்தமையால் "தியாகிகள் சமூதாயம் உருவாகாதா" என்ற விளம்பரப்பலகையை குருகுலத் திற் தொங்கப்போட்டார். இத்தியாகிகளைப் பொறுக்கி யெடுக்கும் சந்தர்ப்பம் 1978-ம் ஆண்டளவில் உருவா கியது.

தென்னிலங்கை மொறட்டுவாவில் திரு. ஆரிய ரத்தின என்பவர் வெளிநாட்டின் உதவியுடன் தனிச் சிங்கள சர்வோதயப் பயிற்சி பலதுறைகளிலும், ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், பெண்களுக்கும் பயிற்சியளித்து வந்தது. வட இலங்கைப் பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் எட்டாம் வகுப்புத் தராதரப் பத்திரத்துடன் பயிற்சிபெற மொறட்டுவா சர்வோதயப் பயிற்சி நிலையத்திற்குச் செல்வார்கள். ஆனால் அப்பயிற்சி தனிச்சிங்கள மொழியிற் பெறுவது மாணவர்க்குச் சிரமம் அளித்தது. இதனால் வடபிரதேசத்தில் சர்வோதயப் பயிற்சியை அளிக்கவேண்டுமென, வவுனியா டாக்டர் சோ. இராசசுந்தரம், திரு. டேவிற் ஐயா அவர்கள் முயற்சியெடுத்து வெளிநாடுகளில் ஒன்றான நொவிப்பின் உதவியுடன் குருகுலத்தில் சர்வசக்திப் பெண்கள் பயிற்சி அளிப்பதெனத் தீர்மானித்தனர். இதனால் அந்நாட்டின் உதவியுடன் சகல வசதிகளும் பொருந்திய சர்வசக்திப் பெண்கள் பயிற்சி நிலையம் கட்டப்பட்டது.

ஸ்ரீ மகாதேவா ஆச்சிரமச் சுவாமிஜீ அவர்களின் ஆசியுடன், திருகோணமலைச் சிவானந்த பெண்கள் விடுதிப் பொறுப்பாளர், சிவானந்த மாதாஜீ அவர்கள் அப்பயிற்சி நிலையத்தைத்திறந்து அரிய பெரிய சொற்பொழிவு ஆற்றினர். துர்க்கா துரந்தரி, சித்தாந்தசாகரம் அப்பாக்குட்டி தங்கம்மா இன்னும்பல பெரியார்கள் கிறீஸ்தவமதப் பெரியார்கள் பயிற்சி நிலையத்தையும் குருகுலத்தை ஆசீர்வதித்துச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சர்வசக்திப் பெண்கள் பயிற்சி தொடர்ந்து 1984-ம் ஆண்டுவரை பலபெண்களைப் பயிற்றியது. மூன்றுமாதப் பயிற்சி பெண்களுக்கு அளிக்கப்பட்டது. பலபின்தங்கிய கிராமங்களில் இருந்து இப்பயிற்சியைப்பெற பெண்மாணவிகள் வருவார்கள். இலங்கையின் எல்லாப் பாகங்களில் இருந்தும் அதாவது மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், மலைநாடு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி முதலிய பிரதேசங்களின் கிராமங்களில் இருந்து இவர்கள் தெரியப்பட்டார்கள். இலவசமாக உணவு அளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெசவு, தையல், பொம்மை செய்தல், விவசாயம் மனையியல், முதலுதவி, வயரில் கூடை பின்னல், பன்ன வேலை முதலிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது. பாலர் பாடசாலைப்பயிற்சி, தமிழ், ஆங்கிலம், காந்தியத் தத்துவம், சமயம் ஆதியனவும் அம்மாணவிகட்குப் போதிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளில் பாலர் பாடசாலை நிறுவி, சர்வசக்திப்பெண்கள் பயிற்சி பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்தார். பெண்கள் பயிற்சி போல, ஆண்களுக்கும் சர்வசக்தி ஆண்கள் பயிற்சி நிலையம் நிறுவிப் பல ஆண்களுக்கும் பயிற்சி அளித்தார்.

இப்பயிற்சிமூலம் பலரியாகிகளைத்தேடி ஓடி உழன்றதை விபரிக்க முடியாததாகும். பாலர் பாடசாலையில் கல்விகற்ற பாலர்கட்கு விழாக்கள் நடாத்திப் பரிசுகளும் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

தனக்குவமை யில்லாதான் றாழ் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது

(திருக்குறள்)

உலகில் நிலையான பொருள் பதி, பசு, பாசம் என்று ஆன்றோர்கள் தங்கள் அநுபவ மூலம் கூறியுள்ளார்கள். சைவ சித்தாந்த நூல்களில் அம் மூன்று பொருள்களின் இயல்புகளின் விளக்கம் பற்றி எழுதியும் உள்ளார்கள்.

பதியாகிய கடவுள் எல்லாம் அறிந்தவர். தனக்கு யாரும் அறிவிக்க அறியாத ஒப்பற்ற முழுப் பொருள். பசு ஆன்மா, அது அறிவித்தாலன்றி எதுவும் அறியாத பொருள், பாசம் அறிவித்தாலும் எதுவும் அறியாது அநாதியே உயிரைப் பற்றி நின்று உயிருக்குப் பிற விகளை அளிக்கும் தன்மையது.

எனவே ஆன்மா இறைவனை அடையவேண்டு மாஞல் பாசத்துடன் இருக்கும் போது அதிற் பற்ருமல் இருக்கப் பழக வேண்டும். இறைவனை அடைய வழி காட்டும் நூல்களைக் கற்றுத் தெளிவு அடைய வேண்டும். தியானப் பயிற்சியில் இருக்க வேண்டும், என்பதை அடிக்கடி அவதார புருஷர்கள், சைவப் பெரியார்கள் அருளாளர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள். நிலையான இறைவாழ்வு இலகுவிற் கிடைப்பதன்று. அத்தகைய வாழ்வைப் பெறுவதுதான் மனித வாழ்வின் நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். ''இறைவன் இவ்வுடலைத் தந்தது தன்னை வழி பட்டு முத்தி யடைவதற் காகும்'' எனச் ஸ்ரீல ஸ்ரீ ஆறு முகநாவலர் பெருமான் அருளியுள்ளார்கள்.

13. 6. 75 சர்வோதயக் குடில் என்னும் ஓர் தூய அங்கம் ஒன்றை அமைத்தார். சர்வம்+ உதயம்— சர்வோதயம். சகல நலன்களும் உதயமாகி எல்லோரையும் வாழ்விக்க அமையும் அமைவே சர்வோதய வாழ்வாகும். இம்முறையில் மகாத்மா காந்திஜீ அவர்களும், ஆச்சார்ய விநோபாவே அடிகளார் அவர்களும் மூன்மாதிரி அளித் துள்ளார்கள்.

கத்தோலிக்கத் திருச்சபையில் இருப்பவர்கள் தமது உழைப்பு முழுவதையும் திருச்சபைக்கு அர்ப்பணம் செய்வார்கள். திருச்சபை அவர்கட்குத் தேவையான வேதனமோ! நன்கொடையோ கொடுக்கும். இந்த நெறி யைப் பிற மதங்களிலும் காண முடிகின்றது. சர்வோ தயக் குடிலும் இதேமாதிரியான அமைப்பைக் கொண் டது. சர்வோதயக் குடில் அங்கத்தவர்கள் தமது உழைப்பு முழுவதையும் சர்வோதயக் குடிலுக்குக் கொடுத்துவிட வேண்டும். சர்வோதயம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து தேவையான பணத்தை அங்கத்தவர்களுக்கு அளிக்கும். மிகுதிப் பணம் அவரவர் கணக்கில் அல்லது ஏதாவது தொழில் விருத்திக்கு மூலதனமாக்கப் படும். இதன் வருமானம் அவரவர் கணக்கில் வைக்கப் படும். அவர்கள் விரும்பினால் இவ் வருமானம் பொதுக்கர்மங் கட்குச் செலவழிக்கப்படும்.

சர்வோதயக் குடில் அங்கத்தவர்களே குருகுலத்தை நிர்வகிக்கும் பொறுப்புடையவர்கள். இவர்களை அநாவ சியமாக விலக்கக் கூடாது. தகுந்த காரணங்கள் காட் டப்பட்டால் மட்டும் விலக்கி விடலாம். இவர்கள் தகுந்த காரணங்கள் இன்றித் தாமாகவும் விலக முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்து. என்பது பேர் ன்ற நாற்பத் தொன்பது தீர்மானங்கள் எழுதிக் கைச்சாத்திட்டு அங்கத்தவர்களிடமும் கையெழுத்து வாங்கினார்.

இந்து போதகர் பயிற்சி நடத்தும் சிந்தனைகள் அப்புஜீ மனதில் கடல் போலக் கொந்தளித்துக் கொண்டே இருந்தது. இது பற்றிப் பல சைவப் பெரியார்களுடன் கலந்துரையாடுவார். எல்லோரும் ஏதோ சரியென்று கூறுவார்கள், ஆனால் செயலில் இறங்கப் பின்போட்டார்கள்.

நாற்றைம்பது அல்லது நாற்றறுபது ஆண்டுகட்கு முன் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் இக் கைங்கரியத்தை அமுலாக்க விழைந்தார். ஆனால் அது கைகூட முன் கைலாசம் விரைந்து விட்டார். அதன் பின்னர் எத்தனையோ சைவப் பெரியார்கள் தோன்றினார்கள். ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் சைவத்தொண்டு, சமூகத்தொண்டு, தமிழ்த் தொண்டு பற்றிப் பிரச்சாரம் செய்தார்கள். நூல்கள் யாத்தார்கள். நூற்றாண்டு விழாக் கொண்டாடினார்கள். இன்றும் கொண்டாடி வருகின்றார்கள். ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற தொட்டுச் சென்ற செயற்பாடுகளை யாரும் சிந்தித்துச் செயலாற்றவில்லை,

ஏன்? சொல்வது, பேசுவது, எழுதுவது எளிது. ஆனால் சொல்லிய வண்ணம், எழுதிய வண்ணம், பேசிய வண்ணம் செயற்படுவது அரிதிலும் அரிதாகும் ''இந்து நாகரிகம்'' என்னும் பாடம் இன்று பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் படித்துப் பட்டம் பெறுகின்றார்கள். சித்தாந்தப் புலவர் பட்டம் எடுக்கின்றார்கள். அவ்வாறு இருக்கும் போது இந்து போதகர் பயிற்சி ஏன்? என்று சிலர் சர்ச்சை செய்வதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துநாகரிகம் பரீட்சைக்காகவும், பதவிக்காகவும் படிக்கின்றார்கள். ஆனால் படித்தது போல வாழ்க்கையில் அநுட்டிக்கின்றார்களா? இல்லையே. சைவசித்தாந்தப் புலவர் பட்டமும் இதுபோலவே காணப்படுகின்றது.

இந்துபோதகர் பயிற்சி, செயல் முறையோடு அளிப்பதால் வாழ்வும் சமயமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத்தோடு மாணவர்கள் பயிற்சி எடுக்கும் போதே சமய ஆசாரங்களையும் அநுட்டிக்கின்ற தன்மை ஏற்படுகின்றது. இவ்வாறு பயிற்சி எடுத்த மாணவர்கள் சமூகத்திற் கலந்து தொண்டாற்றுகின்ற போதும், வேறு பணி செய்கின்ற போதும் அவை பயன் அளிக்கக் கூடியதாக வுள்ளது.

நினைத்ததையும், சிந்திப்பவற்றையும் செயலாக்கும் திறமுள்ள அப்புஜீ அவர்கள் இந்துபோதகர் பயிற்சியை 1980-ம் ஆண்டு நவராத்திரி விஜயதசமியன்று, மகாதேவா ஆச்சிரமம் சுவாமிகளின் ஆசியுடன் பலசைவப் பெரியோர்களின் ஆதரவுடன் ஆரம்பித்தார். இப்பயிற்சியைப் பயிற்றச் சைவப்பண்பும், விவேகமும் நிறைந்த ஆசிரியர்களைப் பொறுக்கி யெடுத்தார்.

ஏழாலை. வித்துவான் மு. கந்தையா B. A. அவர்கள், காரைநகர், தொண்டர் சுவாமி (திரு. அருளம்பலம்) அவர்கள், ஆத்மஜோதி, திரு நா. முத்தையா சுவாமி அவர்கள், அடியேன் இன்னும் வேறுசிலரும் அப்புஜீ அவர்களும் இந்துபோதகர் பயிற்சியை நெறிப்படுத்தினர். இஃது தொடர்ந்து மூன்று வருடம் நடந்தது.

சைவசித்தாந்தம், கந்தபுராணம், திருக்குறள் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் போன்ற பாடங்கள் அம் மாணவர்கட்குப் பயிற்றப்பட்டன. ஆகம விதிப்படியான கோயிற்பூசை முறைகளும், வேதமோதலும், திருமுறைகள் பண்ணோடு பாடலும் இந்துபோதகர் மாணவர்கட்குப் பயிற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகக் குருகுலத்தில் தற்காலிக சர்வ வல்ல வாம்பிகை ஆலயம் ஒன்று அமைத்தார். இதன் அமைப்பு அற்புதமானது. அதிசயம் நிறைந்தது. ஆச்சரியம் மிக்கது. அப்புஜீ சிந்தனையின் தனித்தன்மையை உணர்த்துவதுமாம்.

சுவாமியின் பெயர் பரிபூரணானந்தேஸ்வரர். அம்பாளின் பெயர் சர்வ வல்வாம்பிகை. சித்திவிநாயகர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியக் கடவுள். வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வ மூர்த்திகள் அடங்கிய ஆலயம் அமைத்து நாற்புறமும் நான்கு வாசல்களையும், அமைத்தார். ஒரே பீடத்தில் எல்லாத் தெய்வமூர்த்திகளையும் காணமுடிகின்றது. நித்தியபூசை முக்காலமும் இந்து போதகர் பயிற்சி மாணவர்கள் ஆசார சீலர்களாய்ப் பக்திசிரத்தையோடு செய்வார்கள்.

சமயப் பிரவேச தீட்சையுடன், சிவதீட்சை (விசேட தீட்சை) பெற்றவர்களே கோயிற்பூசை செய்யத் தகுதியுடையவர்கள். எனவே அப்புஜீ அவர்கள் இந்து போதக பயிற்சி மாணவர்கட்கு விசேடதீட்சைபெறும் வாய்ப்பையும் அளித்தார்.

சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, ஆவணிச் சதுர்த்தி முதலியவற்றுடன் விசேட தினங்கள் சமய குரவர்பூசை, தைப்பூசம், ஆடிப்பூரம், ஆகியனவும் விசேடமாக இவ்வாலயத்தில் இடம்பெறுவதுண்டு. குருகுல மாணவர்கள், இந்துபோதகர் பயிற்சி மாணவர்கள் மற்றும் குருகுல அங்கத்தவர்கள் பயனடைவதற்காகச் சமயச் சொற்பொழிவாற்றும் சமயப் பெரியார்களையும் அழைத்துச் சமயப்பிரசங்கம் செய்விப்பதும் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

"நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின்றி
வஞ்சனைகள் சொல்வா ரடிகிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.

கூட்டத்திற் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ கிளியே!
நாளும் மறப்பாரடீ!

யந்திர சாலையென்பர் எங்கள் துணிகளென்பர்
மந்திரத்தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வது உண்டோ?"

(பாரதிபாடல்)

இந்துபோதகர் பயிற்சிபெற்ற மாணவர்களும் ஆசிரியராகும் பணியை அப்புஜீ விரும்பினார். ஏனெனில் இவ்வாசிரியர்கள் மாணவமணிகளின் பிஞ்சுள்ளத்தில் சைவசமய உண்மைகளை ஊட்ட நல்ல வாய்ப்பாக இருக்குமல்லவா "இளமையிற்கல்வி சிலையில் எழுத்து" என்றாங்கு மாணவப் பருவத்தில் சமயக்கோட்பாடுகளைப் பயிற்சிபெற்றால் அது இரத்தத்துடன் ஊறி சமுதாயத்திற்கு நற்பண்புகளை வளர்க்கமுடியும், எனவே அப்புஜீ தனது சிந்தனைகளை அகில இலங்கை இந்துமதக் கலாச்சாரப் பணிப்பாளர்வரை வைத்தார். இந்துமத கலாச்சார மந்திரிவரை சென்றார். அவர்களும் அப்புஜீ அவர்களின் சிந்தனைகட்கும், செயற்பாடுகட்கும் ஆதரவளித்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து இருபதுக்குமேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சி பெற்றார்கள். இவர்கட்கு இலவச உணவு. உடை படிப்பதற்குரிய உபகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துபோதக பயிற்சியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்கள் குருகுலச் செலவில் அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் தியாக மனப்பாங்குடன் பணி புரிந்தனர். இவர்களின் பிரயாணச்செலவு ஆதியனவும் குருகுலம் பொறுப்பேற்றது.

1982-ஆம் ஆண்டு நான்காம் மாதம் இருபத்தோராம் திகதி தொடக்கம் இருபத்தைந்தாம் திகதி வரை கொழும்பில் அகில உலக இந்துமத மகாநாடு நடைபெற்றது. இவ்விழாவிற்கு அகில உலகிலுள்ள இந்துமத தாபனங்களில் இருந்து முக்கிய அங்கத்தவர்கள் வருகை புரிந்தார்கள். அகில இலங்கையில் இருந்தும் இந்துமத தாபனங்களில் இருந்தும் பல தர்ம கர்த்தாக்கள், ஆதீனத்தலைவர்கள், நிர்வாகிகள் வருகை புரிந்தனர். குருகுலச்சார்பில் அடியேன் இந்துமத விழாவிற்குச் சமுகமளிக்கவும், கலந்துரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தபெருமை அப்புஜிக்கே உண்டு. அங்கு நடந்தநூல் கண்காட்சிக்குக் குருகுல நூல்நிலையத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் கொடுக்கப்பட்டன.

1983-ஆம் ஆண்டளவில் இந்த போதகரின் மூன்று வருடப்பயிற்சி நிறைவுற்று நிறைவுவிழா நடந்தது. இதற்கும் இலங்கையின் பலபாகங்களிலும் இருந்த ஆதீனங்கள், அறநிலையங்களில் இருந்தும் நிருவாகிகள், தம்பிரான் ஆகியோர் வருகைபுரிந்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

திரு. சிவசுப்பிரமணியம் நீதியரசர், அகில இலங்கை இந்துசமயப் பணிப்பாளர் திரு. பாஸ்கரதாஸ் இந்துசமய வள்ளல் திரு. மு. சிவராசா ஆகியோரும் பலவித்துவான்கள் முதலாகக் கற்றறிந்த பெரியோர்கள், ஆதீனக்கர்த்தாக்கள், அறநிலையக் கர்த்தாக்கள் கூடிக் கலந்துரையாடினார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சித்தர் வரிசையில் அவதரித்த தவத்திரு. சிவயோக சுவாமிகளின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான அமெரிக்கா காவாய் தீவைச்சேர்ந்த தவத்திரு. சிவசுப்பிரமுனியசுவாமிகளுக்கு அப்புஜீ முயற்சியால் கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பை அளித்து கிளிநொச்சி மக்கள் அவரை அழைத்தனர். சுவாமிகள் குருகுலத்திற்கு இவ்வாறு எழுந்தருளிய வைபவம் கிளிநொச்சியின் வரலாறு காணாத ஒருமங்கலமாகும். சுவாமிகளைக்கொண்டு பரிபூரணானந் தேஸ்வர சமேத சர்வ வல்லவாம்பிகை ஆகிய மூர்த்தங்கட்கு அவர் கைகளால் அபிஷேகம் செய்வித்து அன்னதானமும் செய்து, இவ்வாறு எல்லோரும் இவ்வாலயத்திற்குச் செய்யவேண்டும் என்பதற்கோர் முன்மாதிரியையும் அப்புஜீ காட்டிவைத்தார்.

பாரத நாட்டில் அன்னதானமும், காசிவிசுவநாதர்க்கு அபிஷேகமும் மக்கள் செய்வது வழக்கம். ஈழம்வாழ் எல்லோராலும் காசிக்குப்போய் அவ்வாறு செய்ய முடியாதல்லவா? எனவே அக்கைங்கரியத்தை இங்கு செய்வதால் அவர்கட்குக் காசியில் அபிஷேகம் செய்யும் பலனும், குருகுலக் குழந்தைகட்கு அன்னதானம் செய்வதால் குருகுலத் தொண்டாற்றிய பலனும் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் இக்கைங்கரியத்தை அமெரிக்கச் சுவாமிஜீ அவர்களைக்கொண்டு ஆரம்பித்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

"துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
சோர்ந்து விடலாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாம்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

(பாரதி பாடல்)

ஒரு காலத்தில் இந்தியாவும் இலங்கையும் அந்நிய நாடுகட்கு அடிமைப் பட்டுக் கைகட்டி வாய்பொத்தி வாழ்ந்தன. இதனால் கறிக்குப் போடும் உப்பீற்கும் வழியின்றித் தவித்தது. இதனால் அண்ணல் காந்திஜீ யுடன் பற்பல பெரியார்களும் இணைந்து போராடி 1948 ம் ஆண்டளவில் சுதந்திரம் பெற்றனர். ஆனால் சுதந்திரம் என்ன என்பது அறியாது ஈழம் வாழ் மக்கள் வாழ்ந்தனர். அந்நியர் இலங்கையை விட்டு விலகுவதுதான் சுதந்திரம் என ஈழத்தமிழர் பூரணமாக நம்பினர்.

1956 ஆம் ஆண்டு கொழும்பில் இனக்கலவரம் ஆரம்பித்த பின்னரே சுதந்திரம் எது என்பதை ஓரளவு ஈழ மக்கள் உணர்ந்தனர். காலப் போக்கில் இனக் கலவரம் படர்ந்து காட்டுத் தீ போலத் தமிழர் வாழும் இட மெல்லாம் பற்றத் தொடங்கியது. இதனால் 1978 , 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58, 86, வரையும் தமிழ் அகதிகள் யாழ்குடா, கிளிநொச்சி வவுனியா போன்ற இடங்களில் குடியேறத் தொடங் னர்.

மலைநாடு, செட்டிகுளம், கிளிநொச்சி இன்னும் பல இடங்களில் இருந்து வெளியேறிய ஐநூறுக்கு மேற் பட்ட குடும்பங்கள் 1983 தொடக்கம் குருகுலத்தில் முகாமிடத் தொடங்கியது.

1983 ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு குரு குலத்திற்குப் பெருத்த நட்டத்தை அளித்தது. அக் காலத்தில் கண்டாவளை வயல், குருகுல வயல் ஆதியன வெட்டப்பட்டு உப்பட்டிகளாக அடுக்கப் பட்டு இருந்தன. பாரிய வெள்ளப் பெருக்கால் அலைகள் வெள்ளத்தால் தள்ளப்பட்டுக் கரையொதுங்கிய நெல் உப்பட்டிகளைக் குருகுல மாணவர்களும் அப்புஜீயும் (அடியேனும்) வாரி அள்ளி அதனைப் பதப் படுத்திய விதம் பார்த்த வர்கள் கண்மழை சொரியாது விடமாட்டார்கள். அவ் வருட கால போக நெல் முழுதும் மடி நெல் எனினும் மண்ணிறைந்த அரிசி மணியென்றால் மிகுதியை வாச கர்களே உணர வேண்டும்.

அகதிகள் குருகுலத்தில் முகாமிட்டிருந்த காலத்தில் அவர்கள் விளைவித்த தொல்லைகள், பிரச்சனைகள், சண் டைகள் ஆகிய வற்றை விபரிக்க வேண்டின் அதற்குத் தனியொரு நூல் யாக்க வேண்டும். அத்தகைய அகதி களின் பிரச்சனை யெல்லாவற்றையும் நீக்கி வைக்கும் பொறுப்பு அப்புஜீ இடமே காணப்பட்டது.

1986ம் ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர், யாழ்குடா பிரசைகள் குழுவினர், கிளி நொச்சிப் பிரசைகள் குழுவினர் ஆகியோர் சேர்ந்து ஊற்றுப் புலக் காணியில் ஒவ்வொரு ஏக்கர் காணி அகதி கள் குடியிருக்கக் கொடுத்தனர். அக்காணியின் காடுகளை அழிப்பதற்குக் காட்டுக் கத்தி கோடரி முதலிய ஆதயுங் களை அளித்தனர். வயல் செய்வதற் குரிய வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொடுக்கப் பட்டது. வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டன. கிணறுகளும் வெட்டப்பட்டன, வீதிகள் அமைக்கப் பட்டது

அங்கு குடியேறிய அகதிகளின் பாலர்கள் படிக்கப் பாலர் கல்வி நிலையமும், மாணவர் படிக்க ஆரம்ப பாட சாலையும், அகதிகள் பக்தி சிரத்தையோடு வணங்க அருள் மிகு சித்தி விநாயகர் ஆலயமும், அமைப்பதற்கு அப்புஜீயும் ஓடாகப் பாடு பட்டார்.

அகதிகளின் நலன் கருதி கூட்டுறவுப் பண்டக சாலையும் அமைக்கப் பட்டது "ஊற்றுப்புலம்" நீர்வளம் நிலவளம் செறிந்த தன்மையோடு ஒருகாலத்திற் காணப் பட்டது. அக்காலத்தில் வசதி படைத்த மன்னர்களும் மக்களும் வாழ்ந்ததற் குரிய அகச் சான்று புறச்சான்று கள் காணப்படுகின்றன. அருள் நிறைந்த விநாயகர் ஆலயமும் அக்காலத்தில் இருந்தது. அந்நியரின் வருகையால் இவைகள் யாவும் அழிந்ததாக அறியக்கிடக் கிடக்கிறது. யானைகளின் அட்டகாசத்திற்கு அடிக்கடி அகதிகள் அஞ்சுவதுண்டு. அப்புஜீ அவர்களோ ஆனைக் காவலுக்காகச் செல்வார். அகதிகட்குத் துணிவு வரக் கூடிய புத்திமதிகளையும் கூறுவார்.

அப்புஜீயின் சிந்தனையும் இடைவிடாத பெருமுயற்சியும், பெரியார்களின் ஆசியும், அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும், குருகுலம் என்னும் விருட்சம் படரத் தொடங்கியது. பாண் பேக்கரி, ஒட்டுத்தொழிற்சாலை தச்சுத் தொழிற்சாலை, அச்சுத் தொழிற்சாலை இன்னும் சில முக்கிய தொழிற்சாலை தாபிக்க வெளிநாடுன் உதவி செய்தனர். ஒட்டுத் தொழிற்சாலை உருவாகியது. செயற் படுத்த முன் இனக்கலவரம் தடையாக இருந்தது.

மாதிரி சிறுவர் பாடசாலையும், சிறுவர் விடுதியும் அமைத்தார். "ஐந்தில் வளையாதது ' ஐம்பதில்வளையுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதரவற்ற சின்னஞ்சிறு குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்துக் கல்வி புகட்டுவதற்காகவே மாதிரிப் பாலர் பாடசாலையும் விடுதியும் வெளிநாட்டு உதவியுடன் தன் முதலையும் முதலிட்டுத் தாபித்தார். அது இதுவரை செயற்படுத்த விரும்பவில்லை. இவ்வாறு தனியொரு மனிதனாகிய அப்புஜீயின் சீரிய தொண்டு அறப்பணிகள் பெருகின. அவற்றையெல்லாம் தனித்தனி நூல்களாக யாத்தாலன்றிப் பூரணமாகவும் தெளிவாகவும் அறிதல் அரிதிலும் அரிதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாலரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கரா சய போற்றி யென்றும்
அலர்புனல்சேர் செஞ்சடை எம்மாதி யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.

இந்துபோதகர் பயிற்சி மாணவர்களை உருவாக்க எடுத்தமுயற்சி 1983-ம் ஆண்டு இலக்கலவரம் இடையூறாக இருந்தது. இவ் இந்துபோதகரின் பணி ஆசிரியராகவும், சமய போதகராகவும், ஆதீனம், ஆச்சிரமம் அறநிலையங்களின் தர்மகர்த்தாக்களாகவும் பரவ பல்வேறு துறைகளிலும் முயற்சிசெய்தார். உண்மையான தியாக மனப்பாங்கு நிறைந்த மாணவர்களைத் தேடிப்பலமுறை அவர்களின் வீடுகளுக்குச் சென்றார்.

பிராமணக் குருக்கள் அல்லாதோர் ஆலயத்தில் ஆகமவிதிப்படி பூசைசெய்தல் தவறு என மக்கள் கணிப்பது வழக்கம், ஆனால் பொய்யா மொழிப் புலவராகிய திருவள்ளுவப் பெருந்தகை "அந்தணர் என்போர் அறவோர் மற்றுமவர் செந்தண்மை பூண்டொழுகலரல்" என அந்தணர்க்கு இலக்கணம் கூறுகின்றாரல்லவா?

இந்துபோதகர் மாணவர் ஆலயத்திற்குப் பூசை பண்ணுவதோடு சமுகத்திற்கும் பணிபுரியவேண்டும். இவர்களின் தியாகசேவைக்கு இந்துமத மக்களே வேதனம் மனமுவந்து அளிக்கவேண்டும். இத்தகைய பண்பு சைவசமயத்தையும், தமிழினத்தையும் வளர்க்க உதவுமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமத மக்கள் எல்லோரும் தமது சமயத்தை யும், மொழியையும் வளர்க்கும் சிந்தையராய் இருந்து. இவ்விரண்டிற்கும் தொண்டுசெய்யும் தொண்டர்க்குப் பிடியரிசி மூலம்தான் வேதனமளிக்க முன்வரவேண்டும்.

அப்பர் சுவாமிகள் கடைசி மூச்சுவரை உழவார ரத்திருத்தொண்டு புரிந்தார். அப்புஜீ தனது துணைவி யாருடன் இணைந்து தனது இறுதிமூச்சுவரை குருகுல ஸ்தாபனம் வாயிலாகப் பார்முழுதும் பயனடையச் சீரிய தொண்டாற்றினார்.

மணியும், ஒலியும் பிரியாததுபோல, மலரும், மண மும் பிரிக்க முடியாததுபோல அப்புஜீ, அம்மாஜீ இருவ ரின் பணிகள் குருகுலத்திற் காணப்பட்டன. அவரு டைய மூத்தமகனாகிய திரு. கதிரவேல் முருகதாஸ் என் பவரும் அப்புஜீயின் சீரியதொண்டில் பங்குபற்றி வரு வது அற்புதமானது. 1964-ம் ஆண்டு முதல் இன்று வரையும் இனிமேலும் குருகுலம்வளர அப்புஜீக்குத் தோள் கொடுத்தவர்களில் திரு. ப. கணேசபிள்ளைசுவாமி, திரு. செ. நடராசா ஆசிரியர், திரு. கா. நாகலிங்கம் ஆசிரியர் முதலியோர் ஆவார்கள்.

அப்புஜீ அதிகாலை நான்கு மணிக்கு எழும்புவார். அவசிய கடமைகளை முடிப்பார். நீராடுவார், அனுட் டான முதலியவற்றைச்செய்வார். தனித்துவம் வாய்ந்த தனது மணிக்குரலால் திருப்பள்ளி எழுச்சிபாடுவார் குருகுல மாணவர்களையும் இவ்வாறுசெய்யப் பணிப்பார்.

அதிகாலையில் மாணவர்கள் நீராடி அனுட்டானம் பார்ப்பார்கள். குருகுல முன்றலில் தினமும் அரிசி மாவில் வண்ணமான கோலம் போடுவார்கள். ஆலய வழிபாடு செய்வார்கள். அயலிலுள்ள ஆலயங்கட்கும் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புஜீயின் தோற்றம் ஆச்சாரிய விநோபாவே போன்றது. அம்மாவின் தோற்றம் அன்னை கஸ்தூரிபா போன்றது. பாக்களவு குஞ்சி அப்புஜீயின் முகப்பொலிவையும், திருநீற்றுப் பூச்சும், சந்தன குங்குமத் திலகத்திற்கு விஞ்சிய அழகை அளித்தது வயது எழுபதுதான், ஆனால் அவர்களின் சுறுசுறுப்பைக் கண்டவர்கள் இளைஞனென்று கூறுவார்கள். வெள்ளிக்கம்பிபோன்ற தாடி காணப்பட்டது. கருணை வடிவம் கூர்மையான விழிகள். அன்பு பொங்கிவடியும் வதனம், அருளும் இனிமையும் நிறைந்த பொருள் புதைந்த வார்த்தைகள். இத்தனையும் நிறைந்த அப்புஜீயின் சரித்திரம் ஆத்மசாதனை, கர்மயோகம் நிறைந்த வரலாறு. அத்தகைய அப்புஜீ வயலுக்குத் திறந்த மார்புடனும், மடித்துக்கட்டிய வேட்டியுடனும் தலையித் தலைப்பாகை தோளில் மண்வட்டி சகிதம் வயலில் கொட்டும் மழை, பனி, கொழுத்தும் வெய்யில் என்றெல்லாம் பாராது குழந்தைகளுக்காக உழைத்தார். அன்னார் விட்டுச்சென்ற சிந்தனைக் குவியல் சாகரம் போன்றது. மகாத்மா காந்திஜீ பாரதநாட்டிற்கும் மக்கட்கும் அளித்த நூற்கருத்துக்கள் போன்று காணப்படுகின்றன. அவற்றைச் செயற்படுத்த அயராது உழைப்பு மட்டுமல்ல தெய்வீக சிந்தனையும்வேண்டும்.

1986-ம் ஆண்டு குருகுல தாபனத்திற்குள் ஸ்ரீலங்கா தந்த கெடுபிடியில் மயிரிழையில் அப்புஜீ உயிர்பிழைத்தார். அதன் பின்னரும்கூட தன்னலங்கருதாது குடும்ப நலம் பேணாது குருகுல வளர்ச்சியில் நல்லதோர் சமுதாயம் அமைக்க அப்புஜீ எடுத்த முயற்சிகள் அளவற்றவை.

நீண்டகாலமாக அப்புஜீ சர்வசக்தி மேருபீடம் அமைக்கவேண்டும். இந்துபோதகர் பயிற்சி நடைமுறைப்படுத்தவேண்டும். குருகுலப்பத்திரிகை வெளியிடவேண்டுமெனச் சிந்தித்தார். செயலில் இறங்கி செயல் கைகூடுமுன் குடும்பசமேதரராய் 24-10-87-ல் விண்ணுலகு சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் சரிதம் பெண்கள் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாகவுள்ளது. தலைவனை விட்டுப்பிரியாத தலைவியைப்போல அவரின் வாழ்வும் நிகழ்ந்தது. அன்னை கஸ்தூரிபா, அன்னை கிருஷ்ணபாய், அன்னை சாரதாமணி முதலியோரின் சரிதம் படித்துள்ளோம். அவர்களை நேரே கண்டதில்லை. அவர்களைப்போன்றே தலைவனின் குறிப்பறிந்தொழுகிய உத்தமியின் சரிதம் தனித்துவம் வாய்ந்தது.

நன்னூலார் கூறிய நல்லாசிரியர் இயல்பு அப்புஜீ இடம் மலிந்து காணப்பட்டது. மலர்கள் எல்லா இடமும் காணப்படும். ஆலயம், திருமணம், பொது விழாக்கள், மரணவீடு இவ்வாறு அப்புஜீயும் கானப்பட்டார்.

வெண்ணெய் திரளும்போது சட்டி உடைந்தகதை போல அப்புஜீ குடும்ப மறைவும் ஏற்பட்டது. அவர்களின் மறைவு அதிர்ச்சியைத்தந்தாலும், அன்னாரின் செயற்பாடுகள் அரியவை. அவற்றை நிறைவுபடுத்திச் செயற்படுத்துவது அன்னாருக்கு நாம் செலுத்தும் அன்புக்காணிக்கை.

வாழ்க குருகுலம் வளர்க அவர்தம் புகழ்

ஓம் சாந்தி!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலப் பிரார்த்தனைகள்

அதிகாலை ஐந்து மணிக்குத் துயில் எழுவதற்கு மணி அடிக்கப்படும். அப்போது எல்லா மாணவர்களும் எழுந்து கை கூப்பித் தொழும் போது செய்யும் பிரார்த்தனை.

''எங்கும் நிறைந்து யாவற்றையும் இயக்கும்இறைவனே, எல்லோரும் நன்று வாழ அருள் செய்வாயாக உனது அருளின்றி ஒன்றும் நடவாது. இன்று முழுதும் எங்களோடிருந்து இந்நாளைப் பெரும் பயனுள்ளதாகக் கழிக்க அருள் புரியவேண்டுகிறோம்'.

## காலைப் படிப்பின் முன் செய்யும் பிரார்த்தனை

"அறிவொளி வடிவான அப்பனே, நாங்கள் ஆசிரியர் சொற்படி, எல்லாப் பாடங்களையும் இனிது கற்றுத் தேர்ச்சி பெற எங்களோடு இருந்து துணை புரிய வேண்டுகிறோம்.

அருள் வடிவான ஆண்டவனே

''குழந்தைகளாகிய எங்களுக்கு நீ என்றென்றும் புரிந்துவரும் நன்மைகள் மிகப்பல. நாங்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், நீயே அளித்து வருகிறாய். நாங்கள் இருக்கும் இடமும் இன்புறும் பல நலங்களும் பிற யாவும் உன்னுடையனவே. உனது பேரருளை நாங்கள் ஒருபொழுதும் மறவோம்''

## காலை யுணவின் போது செய்யும் பிரார்த்தனை

''யாவருக்கும் இன்பம் தரும் இனிய கடவுளே உனக்கு வணக்கம் செலுத்துகிறோம், குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகிய எங்களுக்கு நீ நல்லுணவு அளித்தாய். எங்களைப் போல எல்லா மாணவர்களும் காலையில் உணவு கொள்ளக் கடைக்கண் நோக்க வேண்டுகிறோம்''

## நண்பகலுணவுக்கு முன்பு செய்யும் பிரார்த்தனை

இரக்க வடிவமான எங்கள் பெருமானே, எங்களைக் காப்பாற்றும் அண்ணலே, எத்தனைப் பேர் இவ்வேளையில் உணவில்லாது உள்ளனரோ! எல்லோரும் நல்லுணவு கொண்டு நன்ருகக் இருக்க குழந்தைகளாகிய நாங்கள் வேண்டுகிறோம். நீ யாவருக்கும் உணவளிக்க வேண்டுடுகிறோம். எங்களுக்கு எல்லா நலன்களும் புரியும் உனக்கு என்ன கைமாறு செய்ய வல்லோம். உனது அருள் எங்கும் நிறைக''

## மாலை யுணவின் போது செய்யும் பிரார்த்தனை

''அன்பு நிறைந்த இறைவனே உனது திருவருளால் நாங்கள் கவலையின்றி உண்கின்றோம். உனக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். இதுபோழ்து உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் உணவளிக்க உனது அருளை வேண்டுகிறோம்.''

## இரவு துயில்கொள்ளப் போகும் போது செய்யப் படும் பிரார்த்தனை

''அருள் பொருந்திய இறைவனே. இரக்கமுடைய எம் பெருமானே. இன்று முழுவதும் பயனுள்ளதாகக் கழிந்தது. உனது அருளால் யாங்கள் பல நற்செயல்கள் செய்துள்ளோம். யாங்கள் அறியாது செய்த தவறுகளை உனது திருவுள்ளம் அறியும். அடியேங்கள் இதுவரை செய்த பிழைகளை மன்னிக்கவும். இனி எப்பிழையும் செய்யா திருக்கத் திருவருள் புரியவும் உன்னை வேண்டுகிறோம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துவோம்

குருகுலம் என்ற கோயிலைக் கட்டிய
குருவின் பெருமை என்ன என்ன
அருமை மிகுந்த பிள்ளைகள் இவரை
அப்பு என்றன்பாய் அழைக்கின்றார்

மெய்மையும் அன்பையும் அளித்தே எங்களை
மெஞ்ஞான வாழ்வில் திகழச் செய்தார்
பூண்ட அன்பை முதுமையிலும் அவர்கள்
போற்றித் தினந்தினம் காக்கின்றார்

தாகூர் போலத் தாடியும் வைத்து
தமிழ்த் தாத்தா போல் உருவமெடுத்து
ஏந்திய துணிவுடன் வரகாய் உழைக்கும்
எறும்பினைப் போன்ற இயல்புடையார்

கறைபடி யாத நெஞ்சுடையார் அம்மா
கடவுள் என்றே போற்றுகின்றோம்
நரைதிரை கண்ட போதிலும் எமக்கு
நலம்பல செய்தே காத்து விட்டார்

தாயின் பெருமை தரணியில் திகழவே
தெய்வம் போல் வந்து காத்திடுவாள்
பெற்றோரே உங்கள் அரவணைப்பில் நாங்கள்
பேறுபெற்று வாழ்வோம் வாழ்த்துவோம்.

ஆக்கம் பழைய மாணவி
செல்வி நந்தினி கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசக்தி அச்சகம், குருகுலம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org